Germany: 1DM, Switzerland: 1SFr, France: 5Frs, U.K: 50P, Canada: $ 1, Denmark: 5Kr

வருடம் - 03 திருவள்ளுவர் ஆண்டு - 2027 இதழ் - 25

Largest Circulation in Europe

இளைஞன்

ஆனி - 1996 மாத இதழ் - ஜெர்மனி

Tel: 069/ 704439 - ELAIGNAN TAMIL MONTHLY - Fax: 069/ 775669

ஆதவா ஆசியா சென்ரர்

தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப் பொருட்கள், ஓடியோ வீடியோ, சிடி, வார மாத பத்திரிகைகள், மரக் கறி, கடலுணவு வகைகள், அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள—

-ADAVAA ASIYA CENTAR-

Germany - Tel: 069/ 23 02 62

அரசின் போலி நாடகத்திற்கு தமிழ்க் குழுக்கள் துணை!

- குமார் பொன்னம்பலம் சாடல் -

ஜனாதிபதி குமாரணதுங்க ஐ. தே. கட்சியை நோக்கி தீர் வா லோ சணை களை முன் வைத்த பெருமையை தமது அரசாங்கம் தட்டிச் செல்வதையிட்டு சிறுபிள் ளைத்தனமாகப் பொறா மைப்படுவதாக குற்றம் சாட்டுகிறார். ரோமாபுரி தீப்பற்றி எரிந்து கொண் டிருக்கும் வேளையில் யார் நற்பெயரைத்தட்டிச் செல் வது பற்றியும் எந்தளவுக்கு இதில் நமக்கு பெருமையு ண்டு என்பது பற்றியும்

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)

(15 ம் பக்கம் பார்க்க!)

ஏ.கே. 47 பாதுகாப்பு வேண்டாம்:

(சென்னை)

'என் உயிரைக் காத்துக் கொள்ள ஏ. கே. 47 தாங் கிய வீரர்கள், தேவை யில்லை' என முதல்வர்

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)

கந்தப்புவும், சோமண்ணையும்

சோமண்ணை: எங்கட கோவில் ஐயர் ஏன் வேதக் கோவிலுக்கு அடிக்கடி போகிறார்?

கந்தப்பு: பாவ மன்னிப்பு கேட்கத்தான்.

சோமண்ணை: ???!!!. . .

ரவிசெல்லத்துரை

வலிகாமத்துள் சிக்கியுள்ள மக்கள் மீது படையினர் கெடுபிடி அதிகரிப்பு; அடிமையாக வாழும் அவலம்!

(சாவகச்சேரி)

வலிகாமத்திற்குள் சிக்கியுள்ள மக்கள் அடிக்கடி படையின ரது கெடுபிடிகளுக்கு ஆளாகி வருவதாக தெரிய வந்துள்ளது.

இராணுவத்தினரால் வரை யறுக்கப்பட்ட வீடுகளுக்கு மட்டுமே மக்கள் சென்றுவர அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாலையானதும் படையினர் குறிப்பிடும் பொது இடத் திலே தங்க வேண்டுமெனவும் இரவு வேளைகளில் நடமா டக்கூடாது எனவும் படை யினர் உத்தரவிட்டுள்ளனர்.

திடீரென வீடுகளுக்குள் புகும் படையினர் அங்கு சோதனைகளை மேற் கொள்வதுடன் குடும்ப அங்கத்தினரது பெயர்ப்பட் டியலையும் பார்வையிட்டு செல்கின்றனராம் இவ்வா

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)

இலங்கையினரை திருப்பியனுப்பும்

ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு சிறிலங்கா-சுவிஸ் இணக்கம்

(கொழும்பு)

சுவிற்சலாந்தில் புகலிடம் மறுக்கப்பட்டவரை இலங் கைக்கு திருப்பியனுப்புவது சம்பந்தமான இருதரப்பு ஒப் பந்தத்தை புதுப்பிக்க இரு நாடுகளும் இணங்கியுள்ளன இரண்டு வருடங்களுக்கு இவ் ஒப்பந்தம் நீடிக்கப்படும் என்று சிறிலங்கா வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி திருப்பியனுப்பட வுள்ளவர்களின் எண்ணிக்கை பற்றி பின்னர் பேச்சு நடத்தி முடிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் இளைஞன்

முன்றாவது ஆண்டில் கால் பதிக்கிறான்!

பிராங்பேர்ட் நகரில் மக்கள் மனங்கவர்ந்த ஸ்தாபனம்! ஒருமுறை விஜயம் செய்யுங்கள் உண்மையை உணர்வீர்!

அம்பாள் ஆசியன் சொப்

சாறி வகைகள், அனைத்துரக ஜவுளிகள், எவர்சில்வர் பொருட்கள், மற்றும் கடலுணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள், அலங்காரப்பொருட்கள் தங்க நகைகள், மங்கள வைபவங்களுக்கான அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்

AMPAL ASIAN SHOP - Mainzerland nr 111, 60329 Frankfurt/M, Tel & Fax: 069/231277-

ஏ. கே. 47...

கருணாநிதி சென்னை மெரினா கடற்கரையில் காந்தி சிலையருகில் நடைபெற்ற தேர்தல் வெற்றி -நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் தெரிவித்தார்.

"என்னைக் காப்பாற்றிக் கொள்ள என் நெஞ்சுறுதியும் கொள்கைப் பிடிப்பும் போதுமானவை. பெரியார் தந்த துணிவும் அண்ணா தந்த கொள்கைகளும் போதுமானவை. இங்கேயுள்ள தலைவர்களின் அன்பும், உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பும் பாசமும் போதுமானது. நான் வாழ்வதும் உங்களுக்காக. வீழ்ந்தால் அதுவும் உங்களுக்காகத் தான்.

பதவி என்பது மக்களுக்கு உழைக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பு. அதைப் பயன்படுத்திக் கொண்டு உங்களுக்காக உழைப்பேன். என் உயிர் உள்ள வரை என்றென்றைக்கும் உழைப்பேன்.

"முன்பு போல முதல்வர் செல்வதற்காகச் சென்னை முழுவதும் போக்குவரத்தை நிறுத்த வேண்டாம் என்று சொன்னதைக் காவல் துறையினர் தவறாகப் புரிந்து கொண்டனர் போலும். நான் வீட்டிலிருந்து கிளம்பி, இங்கே வருகிற வழியில் தாராளமாக வர முடியாத நிலை ஏற்பட்டது. நான் ரொம்ப மலிவாக நடந்துக் கொண்டால், இப்படித்தான் என்று சுட்டிக் காட்டுகிற நிலை ஏற்பட்டது. அதையும் ஏற்றுக் கொண்டு கூட்டத்துக்கு வந்து சேர்ந்தேன்" என்றார் அவர்.

அரசின்...

நாம் பேசிக்கொள்கிறோம் இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் ஒரு ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"எந்தச் சிங்களக் கட்சி பெருமையைத் தட்டிச்செல்ல வேண்டும் என்ற கௌரவப் பிரச்சினைக்கு என்னதான் தீர்வு? இதற்கான தீர்வு என்னவெனில், சிங்களக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தமிழ்மக்களுக்கு எந்த அளவு உரிமைகளை வழங்குவதென்று, எந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதென்றும் தீர்மானிப்பதேயாகும் அத்தகைய சட்டமொன்றில் தான் தமிழ் மக்களின் உரிமைகளை எந்த அளவிற்கு சிங்களவர்கள் அங்கீகரிப்பார்கள் என்பதும் தமிழர் பிரச்சினைக்கு எப்போதாவது தீர்வு வருமா என்பதும் தெரியவரும்.

தமிழ்த் தலைவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் போலி நாடகத்திற்கு உறுதுணையாக உள்ளனர்

தமிழர்களே தமது சுய நிர்ணய உரிமைக்காக இது வரை காலமும் போராடி வந்துள்ளனர். அவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் தீர்வு யோசனைகளைப் பற்றி ஆராய அவர்களுக்கு போதிய அவகாசம் அளிக்கப் பட்டதா? போர் ஒரு புறமும் மறுபுறம் அகதிகள்பிரச்சினை யெனவும் தமிழ்மக்கள் நிர்க்கதியான நிலையில் தீர்வா லோசனைகள் பற்றி விவாதிக்க முடியுமா? இந்நிலையில் பேச்சுவார்த்தை – கலந்துரையாடல் போன்றவற்றால் என்ன பயன்?

இதேவேளை ஜனாதிபதி, அவரது அரசைபதவியில்நிலைக்க வைத்துள்ள தமிழ்க்கட்சிகளைச் சாடுகிறார் ஆனால் அவர்களோ சுரணையற்று அரசியலை ஆதரித்த வண்ணமுள்ளனர், இந்தக்கட்டத்திலாவது இவர்களின் கண்ணை ஜனாதிபதியின் பேச்சுதிறந்து வைக்குமா? இல்லையெனில் இவர்கள் மென் மேலும் மானப்படவே நேரும் இவர்களை யாரும் மதிக்கப்போவதில்லை. இவர்களின் இச் செயல் கமிழினத்தையே காட்டிக்கொடுக்கும் செயலாகிவிடும், எனவும் அவர் அவ் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

5 போராளி இயக்கம் வாழ்த்து!

முதல்வர் கருணாநிதிக்கு!!

இலங்கை போராளி இயக்க தலைவர்களான சித்தார்த்தன் (பிளாட்), சங்கர்ராஜீ (ஈராஸ்), சுரேஷ் பிரேம்சந்திரன் (ஈபி.ஆர்.எல்.எப்), வினோதலிங்கம் (டெலோ), டக்ளஸ் தேவானந்தா எம்பி. (ஈபி.டிபி) ஆகியோர் கூட்டாக முதலமைச்சர் கருணாநிதிக்கு வாழ்த்து செய்தி அனுப்பி உள்ளனர். அதில் அவர்கள் கூறி இருப்பதாவது:-

தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள நீங்கள் தொடர்ந்து ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு வற்புறுத்துவீர்கள் என்று நம்புகிறோம். ஈழத் தமிழர்கள் துயரத்துக்கு முடிவு கட்ட தொடர்ந்து ஆதரவு அளிப்பீர்கள் என்று நம்புகிறோம்" என்று கூறி உள்ளனர்.

வலிகாம...

வாறு வீட்டுக்குள் புகும் படையினர் சமையல் அறைகளுக்குள் புகுந்து அங்குள்ள உணவுப் பொருள்களின் அளவுகளையும் குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கையையும் ஒப்பிடுவதுடன் கூடுதலாக சாப்பாடு சமைக்கப்பட்டிருந்தால் குடும்பத்துடன் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனராம்.

இதனால் தேவையான அளவு உணவை சமைத்து உடனுக்குடன்உண்ண வேண்டிய நிலையில் அங்குள்ள மக்கள் உள்ளனர். வாராவாரம் குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமே இம்மக்களுக்கு வழங்கப்படுகிறதுவருமானம் எதுவுமின்றிவாழும் இவர்கள் அன்றாட சாப்பாட்டுக்கு தேவையான பொருள்களை பெற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

வலிகாமத்தில் விளையும் எந்த ஒரு உற்பத்திப்பொருளையும் எடுக்கக் கூடாது என படையினர் உத்தரவிட்டுள்ளதுடன் படையினரே அவ்வாறு விளையும் பொருள்களை எடுத்துச் செல்வதாகவும் தெரிய வந்துள்ளது.

நீல நிறத்தில் ஆப்பிள் பழம்!

நாட்டிங்காம்.

நீலநிறத்தில் ஆப்பிள் பழம், மஞ்சள்நிறத்தில் தக்காளிப் பழம் கருநீல நிறத்தில் வாழைப்பழம். இதையெல்லாம் பார்க்க முடியுமா? இன்னும் கொஞ்ச நாள் போனால் இதுபோல வண்ண வண்ண பழங்களை சர்வசாதாரணமாக கடைவீதிகளில் பார்க்க முடியும். காரணம் பழங்களின் நிறம், மணம், ருசி போன்றவற்றை கட்டுப்படுத்தும் மரபு அணுக்களை விஞ்ஞானிகள் கண்டு பிடித்து விட்டனர்.

இங்கிலாந்தின் நாட்டிங்காம் பகுதி விஞ்ஞானிகள் பழங்களை பயன்படுத்தி எப்படி நோயை தடுக்கலாம் என்பது பற்றி 13 ஆண்டு காலம் இடைவிடாமல் ஆராய்ச்சி நடத்தினார்கள். இதில் பயட்டில் இருப்பவர்களின் வசதிக்காக பழங்களில் உள்ள சத்தை கூட்டவும் குறைக்கவும் முடியும் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. பழத்தின் நிற அணுக்களை மாற்றி அமைப்பதன் மூலம் சிலவகை புற்றுநோய் அபாயங்களையும் தடுக்க முடியுமாம்.

"இளைஞனால் உலகில் ஒன்றிணைவோம்!"

ELAIGNAN TAMIL MONTHLY

Largest Circulation in Europe

இளைஞன்

முகவரி:-
ELAIGNAN
GINNHEIMER STR. 24 A
60487 FRANKFURT/M
GERMANY
Tel: 069/ 70 44 39
Fax: 069/ 77 56 69

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: ARTIST SEGAR

ஆசிரியர்: ஓவியர் சேகர்

இணை ஆசிரியர்:
ஏ. ஜே. ஞானேந்திரன்

துணை ஆசிரியர்:
ரவிசெல்லத்துரை

நமது நிருபர்கள்:
கொழும்பு: R. பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
12 மாதம்: 30 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" உலக பிரதிநிதிகள்

சுவிற்சலாந்து
P. சந்திரன்
Haupt str. 54
4127 Birsfelden
Basel (CH)

பரீஸ்
ரமணன் வீடியோ பலஸ்
7, Rue Perdonnet
75010 Paris

டென்மார்க்
S. செல்வன்
Nr. Sundbyvej - 28 st.
8900 Randers

லண்டன்
சிவம் - பரமலிங்கம்
15 Farn House
HA0 4Uy Wembly - UK

ஜேர்மனி
T. ஜோதி
Lange str. 243
59067 Hamm

இவ் இதழில் வரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கதாரர்களே பொறுப்புடையவர்கள்.
ஆக்கங்களின் கருத்து மாறுபடாது அதனைச் சுருக்கவோ, திருத்தவோ ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.
"இளைஞன்" இதழிலிருந்து எந்த வொரு ஆக்கமும் மறுபதிப்புச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஓ... இளைஞனே...!

**நீ எல்லாவற்றையும்
இழந்து விட்டாயா?
கவலை வேண்டாம்.
உள்ளே உறுதி இருக்கிறதே
உன்னிடம் பிறகேன் வாட்டம்.**

-ஜான் மிஸ்டன்-

விளையாட்டு வினையானது!

உடுப்பிட்டிப்பகுதியில் குண்டொன்று வெடித்ததால் மூன்று சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.
அப்பகுதியில் உள்ள பாழடைந்த கட்டடமொன்றிலிருந்த குண்டின் மீது மேற்படி சிறுவர்கள் கல் எறிந்து விளையாடியதாகவும் அப் போது அக்குண்டு வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இக்குண்டுவெடிப்பில் உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்தவர்களான மாசிலாமணி ரவிநாத் (வயது 13), நல்லதம்பி சதீஷ்வரன் (வயது16), மகாலிங்கம் கிருபாகரன் (வயது 15) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.



அங்கு இரண்டு குண்டுகள் காணப் பட்டதாகவும் அவற்றின் மீது கல்லெறிந்து விளையாடியதாகவும் இதில் ஒரு குண்டு வெடித்ததாக வும் தெரிவிக்கப்படுகின்றது. இப் பகுதியில் முன்னர் இந்திய இரா ணுவம் முகாமிட்டிருந்தது குறிப்பி டத்தக்கது.

சந்திரிகா மிரட்டல்

இந்த நிலையில் மக்கள் கூட்டணியின் நிர்வாக குழு கூட் டத்தை சந்திரிகா கூட்டினார். இந்த கூட்டணியில் இடம்பெற் றுள்ள இலங்கை சமசமாஜ் கட்சி இலங்கை முழுவதும் அவசர நிலையை நீடித்ததற்கு கண்டனம் தெரி வித்து கூட்டத் தை புறக்கணித்த தாக அந்த கட்சியின் தலைவர் பட்டி வீரகோன் தெரிவித்தார்.
இந்த நிலையில் கூட்டத்தில்

பாராளுமன்றம் கலைப்பு என மிரட்டல்!!

கொழும்பு, - இலங்கையில் ஆளும் கூட்டணியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. சந்திரிகாவை எதிர்த்து கூட்டணி கட்சிகள் போர்க்கொடி தூக்கி உள்ளன. இதனால், அரசு கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து பாராளுமன்றத்தை கலைத்து விட்டு தேர்தல் நடத்தப்போவதாக சந்திரிகா மிரட்டி உள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான மக் கள் கூட்டணி அரசு உள்ளது. இந்த கூட்டணியில் இலங்கை சுதந்திரகட்சி, கம்யூனிஸ்டு, இலங்கை மகாஜன பக்ஷயா, இலங்கை சமசமாஜ் கட்சி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உள்பட பல கட்சிகள் இடம் பெற்று உள்ளன. கூட்டணியில் இடம்பெற்றுள்ள சில கட்சிகள் சந்திரிகாவின் முடிவுகளை எதிர்த்து வருகின்றன. இத னால் குழப்பநிலை ஏற்பட்டது.

பிரிய சந்திரிகா கூறியதாவது:-
அரசு நிர்வாக முறைக்கு எதிராக இலங்கை சமசமாஜ் கட்சி போர்க்கொடி தூக்கி உள்ளது. இப்படி 4 முறைக்கு மேலாக அவர்கள் நடந்துள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் பாராளுமன்றத்தை கலைத்து விட்டு புதிதாக தேர்தல் நடத்தப்படும் என்று எச்சரிக்கிறேன். அந்த தேர்தலில் சுதந்திராகட்சி தனித்து போட்டியிடும்.
இவ்வாறு அவர் கூறினார்.

ஓவியர் மணியம் காலமானார்

ஈழத்தின் பிரபல ஓவியர் மணியம் அவர்கள் தனது 72 வயதில் தமிழீழத்தில் கால மானார்.
சினிமாப்படங்களுக்கான 'கட் டவுட்' வரைவதன் மூலம் இலங்கையில் மிகப்பிரபலமா கியவர் இவர். நடிகர் திலகம் சிவாஜி கணேஷன் ஒரு பேட் டியில்:-இலங்கையில் தென் னிந்திய திரைப்படங்கள் 100 நாட்களுக்கு மேலாக ஓடுவ தற்கு, ஆர்ட்டிஸ் மணியம் அவர்கள் வரையும் கட்டவுட் களே காரணம் என்று சொல் லியிருக்கிறார்
இந்த ஓவிய மேதையின் மர ணத்தையிட்டு 'இளைஞன்' தனது ஆழ்ந்த இதயத்து அஞ் சலியை செலுத்துகிறது.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்பது சந்திரிகாவின் போர் வெறியின் வெளிப்பாடே!

- குமார் பொன்னம்பலம் -

சமாதானத்திற்கான போர் என்பது சந்திரிகாவின் போர் வெறியினை நிருபிப்பதாக உள்ளது என குமார் பொன் னம்பலம் தெரிவித்துள்ளார்,

'சமாதானத்தை ஏற்ப டுத்துவதற்காக உலகில் எந்த நாடும் போரில் இறங்கியது கிடையாது என்ற தலைப் பில் கொழும்பு தமிழ் பத் திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் அகில இல ங்கை தமிழ் காங்கிரஸ் தலை வர் குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

சமாதானத்திற்கான போர் என்ற குறிக்கோளில் சிங்கள மக்களே சந்தேகப்படுகின்ற னர். தமிழ் தேசிய இனமோ விடுதலைப்புலிகளை ஒழித் துக்கட்டி எஞ்சியுள்ள தமிழ் மக்களையும் அழிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் ஒரு வழிவகையாக கருதுகிறது. உலகில் எந்தநாடும் சமாதா னம் பேசிக்கொண்டு இவ் வாறு செயல்படுவது கிடை யாது.

சமாதானத்திற்கான போர் என்ற கருத்து விடுதலைப்புலி களை ஒழித்துக்கட்டியதும் சரியாகி விடுமா இதுதான் கருத்தாயின் இதன் மூலம் சமாதானத்தை எய்திவிட முடியுமா? சந்திரிகா அபிப் பிராயப் படுவது போல் மக் கள் முன் சமாதானத் தீர்வை வைப்பதற்குப் போர் உதவி செய்யும் என்பது அதன் கரு த்தானால் தமிழர் பிரச்சினை க்கான தீர்வொன்றைக் கண்டு அமுல் படுத்தும் கால கட்டத்திலும் கூட போர் தொடர வேண்டும் என நம்ப வேண்டியிருக்கும்.

சந்திரிகா முன்வைத்துள்ள தீர்வாலோசனைகள் வெளி வந்த பின்னர் மாத்திரமே அமுல்படுத்தல் பற்றி பேசவோ சிந்திக்கவோ முடி யும். ஆனால் விடுதலை புலி கள் களத்தில் இருக்கும் வரை அமுல் படுத்தல் பற்றிய எண் ணம் கூட கைவிடப்பட வேண்டிய தொன்றாகும் என அவர் அக்கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

லக்சுமி ஆசியன் மார்க்கெட்

உங்களுக்குத்தேவையான இலங்கை, இந்திய உணவுவகைகள், மரக்கறிகள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள், குழந்தைகள், பெரியவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள், 22 கரட் தங்க நகைகள் நீங்கள் விரும்பிய வண்ணத்தில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் புதிய, பழைய திரைப்படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் உண்டு. தரமான ஓடியோ, சீடிக்கு எம்மை நாடுங்கள். காஸ் அடுப்புகளும், சமையல் பாத்திரங்களும் வாடகைக்கு தரப்படும்.

Huetten Platz 20 - 22, 35683 Dillenburg, Tel: 02771/6585 & 02778/2148, Fax: 02771/6508

போகிற போக்கில்...

-ஏ.ஜே.ஜி-



தின்ற வீட்டுக்கு இரண்டகமோ?

விருந்தாளி வீட்டில் சாப்பிட வந்தவர்கள் கலகம் விளைவிக்கலாமா?
விளைவிக்கிறார்களே...
ஏறத்தாழ இன்று ஜேர்மனியில் 50-0,000 குர்தீஷ் இனத்தவர்கள் (துருக்கியில் வாழும் ஒரு இனத்தவர்) வாழ்கிறார்கள். இப்பொழுதெல்லாம், தமக்கு தஞ்சம் தந்து வாழவைக்கும், ஜேர்மனிய பொலீசாருடன் கைகலப்பில் இறங்க ஆரம்பித்து விட்டார்கள். PKK என்று சுருக்கமாக அழைக்கப்படும் (குர்தீஷ் தொழிலாளர் கட்சி) 1993 இலிலிருந்து ஜேர்மனியில் தடை செய்யப்பட்ட ஒரு கட்சி! துருக்கியில் ஜேர்மனி ஆயுத விற்பனை செய்யஇ அந்த ஆயுதங்களால் துருக்கி அரசு, குர்தீஷ் புரட்சிவாதிகளை, அழிக்கிறது என்ற கொதிப்பிலேயே பொலீசாருடன் இந்த இயக்க உறுப்பினர்கள் மோதல்களில் இறங்கி இருக்கிறார்களாம். 50,000 பேர் வரையில் ஆதரவாளர்களும் உண்டு.

இப்பொழுதெல்லாம் பத்திரிகைகளின் முன்பக்கங்களில் இரத்தம் வழிந்தோட நிற்கும் ஜேர்மன் பொலீசார், பரவலாக குர்தீஷ் கட்சிகளின் வன்முறைகளில் இறங்குவது போன்ற செய்திகள்தாம் வருகின்றனவாம்.

'நாட்டுக்குத் திருப்பி அனுப்புவார்கள் வன்முறையைக் கைவிடுங்கள்' என்று ஜேர்மன் அதிபர் அண்மையில் எச்சரித்திருந்தாலும், 'யாரையும் திருப்பி அவர்களது நாட்டுக்கு அனுப்பி, அவர்கள் சித்திரவதைப் படவிடக்கூடாது' என்று பதில் எச்சரிக்கை விடுகின்றது "Die Zeit" என்னும் ஜேர்மன் பத்திரிகை.
யாருக்குத் தப்புவது?



காதலி கம்பி நீட்டினால் கண்டபடி குடிக்கலாமோ?

நடந்து வந்தால் ஒரு மலை பெயர்ந்து வருவது போல இருக்கும். அப்படி ஒரு உருவம். பிறப் பால் ஹவாய் தீவைச்சேர்ந்த ஜப் பானிய சுமு (SUMU) மல்யுத்த சாம் பியனாக இன்று திகழ்பவர்தாம் AKEBOND. இவரது எடை எவ்வ எவு என்று கேட்கிறீர்களா? 250 கிலோகிராம்.

இவருக்கும் ஒரு காதலி இருந்தி ருக்கிறாள். (இறந்த காலத்தில் சொல்வதினால் இப்பொழுது காதலி கைவிட்டு விட்டாள் என்று அர்த்தம்) இதனால் மனமுடைந்து இவர் மதுபானத்தைப் பருக ஆரம் பித்திருக்கிறார். அதுவும் 30 நிமி டத்தில் 1 லீற்றர் என்ற கணக்கில் மதுவைக் குடித்துத் தள்ளியிருக்கி றார். சாம்பியனாயிற்றே! விடு வாரா?

விளைவு... குடித்துவிட்டு நல்ல போதையில், பக்கத்தில் இருந்த வற்றையெலலாம் அடித்து நொருக்க ஆரம்பித்திருக்கிறார். மதுபான சாலையில் இருந்த 15,000 ஜேர் மன் மார்க் பெறுமதியான சிலை யொன்றையும் அடித்து நொருக்கி யிருக்கிறார்.

அட்டகாசம் பொறுக்க முடியாமல் பொலீசார் சுற்றி வளைத்து, வெறி பிடித்தவரை அடக்கியிருக்கிறார். அதுவும் இந்த மாமிசமலையை 10 பொலீஸ் அதிகாரிகள் சேர்ந்தே மடக்கிப்பிடித்திருக்கிறார்களாம்.
பலே பயில்வான்!

அம்மாவாகிறார் மடோனா

தன் இனிமையான குரலால் பாடும் அழகி மடோனா தல் உடலையும் இஷ்டம் போல எல்லோருக்கும் காட்டி அசத்துவதுண்டு. பிறப்பால் இத்தாலி நாட்டவரான இவர் சர்ச்சைக்குரிய பாடகி என்பது உங்களுக்கு தெரியுந்தானே? முழு நிர்வாணமாகவே திரைப்படங்களில் நடித்து, பச்சையாக உடலுறவுக் காட்சிகளில நடித்து பெரும் பரபரப்பை ஏற்படுத் தியவர் இந்தப்பாடகி...
இப்பொழுது இவர் தாயாகி இருப்பதாக அறிவித்துப் பெரும் பரபரப்பை மேலும் உண்டாக்கியிருக்கிறார். இவரது அந்தரங்க பயிற்சியாளரான CARLOS LEON என்பவரே இந்த 'திருவிளையாடலை' செய்திருக்கிறார்.
37 வயதான மடோனாவுக்கும் இவருக்கும் இடையிலான உறவு வளருமா? இப்பொழுது தொட்டே தனது' சினேகிதனுடன் ஒரு ஒப்பந்தம் செய்திருக் கிறாராம் மடோனா!
அது என்ன ஒப்பந்தம்?
இடையில் நமக்குள் பிணக்கு ஏற்பட்டுப் பிரிந்தாலும் பிள்ளை என் பொறுப்பில்தான் இருக்கும் என்பதே அந்த நிபந்தனை!
அம்மாவாகினாலும் சும்மா இருக்க மாட்டார் போலிருக்கிறது.

முக்கிய அறிவித்தல்!

தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த இதழில் ப.இராஜகாந்தன் அவர்களின் "எதிர்பார்ப்புகள்" என்ற சிறுகதையும், "சிறுவர் உலகம்" என்ற பகுதியும் பிரசுரிக்கப் படவில்லை. அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

ஐரோப்பிய மோகத்தில் தமிழர்கள்!

அநேகமான தமிழர்கள் தாம் எங்கிருந்து வந்தவர்கள், எப்படி இருந்தவர்கள், எங்கு பிறந்து வளர்ந்து கல்வி பயின்றவர்கள் என்பதை ஐரோப்பாவிற்கு வந்த பின் மறந்து விடுகின்றார்கள். இலங்கையிலுள்ள பலவகையான இடங்களிலுமிருந்தும் வந்திருக்கி றார்கள். குறிப்பாக இலங்கைப்பி ரச்சனையால் அகதிகளாக தஞ் சம் புகுந்தவர்கள் யாழ்மக்கள் தான். இங்கே வந்து 2, 3 வரு டங்கள் ஆனதும் தாம் ஐரோப்பி யர்கள் என எண்ணுகிறார்கள். 'முக்காலமும் காகம் முழுகி குளித்தாலும் வெள்ளை கொக் காகுமா?' தாய்நாட்டை கேவல மாக நினைக்கிறார்கள். தாய் மொழி தமிழ் என்றபடியால்தானே தஞ்சம் கொடுத்தார்கள் என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்! குறிப்பாகச் சொல்லப் போனால் தமிழில் சம்பாஷிக் கவே கூச்சப்படுகிறார்கள். ஐரோப்பியர்களுக்கு முன்னால் தமிழனுடன் தமிழ் கதைப்ப தற்கு தயங்குகிறார்கள். ஏனென் றால் அவர்களுக்கு தமிழில் சம் பாஷிப்பது அநாகரீகமாம்! ஏன் தமிழன் தன்னைத்தானே இழி வாகக் கருதுகின்றான்? தமிழ் முறையில் உணவு உட்கொள்ள வெட்கப்படுகின்றார்கள். தாம் பிறக்கும்போதே கத்தி, கரண்டி யோடு பிறந்திருப்பதாக தங்களுக் குள் ஒரு நினைப்பு. யாழ்நகரில் மிகச்சிறிய கிராமங்களில் பிறந்து வளர்ந்தவர்கள் கூட கொழும்பு நகருக்கு செல்லாமல் கொழும்பை ஏளனப்படுத்துகிறார்கள். கிராமங் களில் வசித்தவர்களைப்பற்றி இழிவாகக் கூறவில்லை. ஆனால், குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்துவிட்டு வேறு இடங்கள் சென்று பார்க்காது இருட்டோடு இருட்டாக கொழும்பு விமானநி லையம் மூலம் இங்கே வந்தவர் கள் இருக்கிறார்கள் தானே! அவர்கள் என்றுமே காணாததைக் கண்டது போல ஆச்சிரியப்படுகி றார்கள். இதேவேளை கொழும்பு நகருக்குச்சென்று விடுதலையைக் கழித்து வந்தவர்கள் அங்கே அசுத்தமாக இருப்பதாகவும், சனநெருக்கடியாக இருப்பதாகவும் குறை கூறுகிறார்கள். இப்படி இருப்பதற்கு காரணம் என்ன என் பது அவர்களுக்கு தெரியாதா என்ன? யாழ்மக்கள் சொந்தமண் ணின் பிரச்சனை காரணமாக தொகையாக கொழும்பு நகருக்கு இடம் பெயர்ந்துள்ளதால் சனநெ ருக்கடியாக இருப்பதில் வியப் பொன்றும் இல்லையே! இயற்கை வளம் நிறைந்த இலங்கையைப் பற்றி வெளிநாட்டவர்களே பாராட் டும்போது, வெளிநாட்டு மோகத் தில் வாழும் தமிழர்களுக்கு இலங்கை எப்படி பிடிக்கப்போகி றது?

அங்கே காற்சட்டை போடாதவர் கள்கூட இங்கே சாரம் அணிய தயங்குகிறார்கள். தமது பிள்ளை களுக்கு தமிழ்ப்யெரை வைக்க வெட்கப்படுகிறார்கள். இவர்களெல் லாம் 'அற்பனுக்கு மவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப் பவர்கள்' அண்மையில் ஒரு நபரை சந்தித்தபோது (அதாவது கொழும்பு சென்று திருமணம் முடித்து வந்த வர்) அங்கே ஒரே தூசாக இருப்ப தாகவும், வெட்கையாக இருப்பதா கவும் குறைப்பட்டார். ஆசிய நாடுகள் கோலம் இப்படித்தான் என்பதை ஐரோப்பிய வாழ்க்கை மறக்கவைத்து விட்டது போலும்! சனநெருக்கடி அதிகமாக சனவெட் கையும் கூடும். கோடைக்காலத் தில் ஐரோப்பாவில் கூட எப்படி யிருக்கும் என்பதை இலங்கையில் திருமணம் முடிக்கவ்வென்ற அந்த நபர் மறந்துவிட்டார். அவர் தான் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து இருப்பதுபோல் நடிப்பதனால் எதைச் சாதித்து விடப்போகிறார்? அவர் தனது பிறந்த மண்ணை அவசியம் நினைவுகூற வேண்டும். நம்நாட்டு உணவுவிடுதிகளில் உணவருந்தினால் ஒரே மண்ணாக

தொடர்ச்சி 23ம் பக்கம்...

பணிவு



மண்ணை நோக்கிக் குனிந்திருந்தது தெருவிளக்கு.

'இந்தத் தெருவிளக்கு கோழையாய்க் கைகட்டிக் குனிந்து நிற்பதைப் பார்த்தால் வெட்கமாக இல்லையா?' என்றது காக்கை.

நீண்ட காலமாகத் தெருவின் ஓரத்திலேயே நின்ற தென்னை நெருப்பானது.

'கூர்ந்து கவனி. தெருவில் ஒளியைப் பாய்ச்சி - தொண் டாற்றிக் கொண்டே - பெருமையால் தலை வீங்கிப் போகாமல் அடக்கத்தோடு நிற்கிறது தெருவிளக்கு.'

என்றது தென்னை.

மீண்டும் 'புரிகிறதா' என்று காக்கையைப் பார்த்து அது கேட்டது.

பிறகு சொன்னது:-

'பணிவு வேறு
குனிவு வேறு'

-காசி ஆனந்தன்.

டென்மார்க்கிலிருந்து தமிழரசி



* திருமண வாழ்த்து மடல்கள்
* விளம்பர அறிவிப்புப் பலகைகள்
* கோயில் திரைச்சீலைகள்
* உருவப்படங்கள்

மற்றும் சகல விதமான ஓவிய வேலைகளுக்கும், திருமண, பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்:
தொலைபேசி: 069/ 70 44 39

பெண்ணுலகம்

'இந்தியாவில் பெண்கள் சரியாக நடத்தப்படவில்லை'

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் மனைவி கருத்து

கிளின்டன் - திருமதி. ஹில்லரி.

"இந்தியாவில் பெண்கள் சரியாக நடத்தப்படவில்லை" என்று, அமெரிக்க ஜனாதிபதி பதி கிளின்டன் மனைவி கருத்து தெரிவித்து உள்ளார்.

பெண்களுக்கு எதிரான கொடுமை

சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் அமெரிக்க அதிபர் கிளின்டன் மனைவி ஹிலாரி கிளின்டன் கலந்துகொண்டார். அந்த பள்ளி மாணவிகளிடையே உலகத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் தீமைகள் குறித்து பேசினார். அவர் பேசியதாவது:-

ஆசியா கண்டத்திலே இந்தியாவில் தான் பெண்களுக்கு எதிரான உரிமைகள் மறுக்கப்படுவது அதிகமாக இருக்கிறது. இந்திய பெண்கள் தங்களுடைய உணவுதேவைக்கு கூட போராடவேண்டி இருக்கிறது.

நான் இந்தியாவிற்கு சென்ற போது இதை கண்டேன். இந்த சம்பவத்தை நான் உங்களிடம் கூறினால் நம்பமாட்டீர்கள். இதை நேரடியாக நீங்கள் கண்டு கொண்டால் தெளிவாக புரிந்துகொள்வீர்கள்.

விழிப்புணர்வு இல்லை

அதே போல அமெரிக்காவிலும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடக்கத்தான் செய்கிறது. இந்த விஷயத்தில் அமெரிக்கா இன்னும் விழிப் புணர்வு அடையவில்லை என்றே சொல்லலாம்.

எனது கணவர் இளைஞராய் இருக்கும் போது அன்னையுடன் வசித்துவந்தார். அப்பொழுது அவருடைய தாயின் 2-வது கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து அவருடைய அன்னையை அடித்து துன்புறுத்தி இருக்கிறார்.

கலாச்சார மதிப்பு

பெண்களின் லட்சியம் சரியில்லாத தீர்க்கமான எல்லையை கொண்டிருக்காமல் இருப்பதால் பெண்களின் சமூக நீதி கேலிக்குரியதாகவும் தடைபட்டுப் போயும் காணப்படுகிறது.

மேலும் இந்த பள்ளியில் ஏறக்குறைய 42 நாடுகளை சார்ந்த மாணவ- மாணவிகள் படிக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு மொழிகளை பேசுகிறார்கள். அவர்களுடைய மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் மதிப்பு கொடுக்கிறார்கள். எனவே அமெரிக்கர்களாகிய நாம் அவர்களுக்கு எவ்வாறு மதிப்பு அளிக்கிறோம் என்பதும் அவர்களை அங்கீகரிப்பதும் மிகவும் முக்கியமானதாகும்."

மேற்கண்டவாறு கிளின்டன் மனைவி கூறினார்.

* உருளைக்கிழங்கு வறுவல் மொரமொரப்பாக இருக்க, கிழங்கின் மேல் சிறிது பயத்த மாவை தூவி பொரித்தெடுத்தால் மொரமொரப்புடன் சுவையா இருக்கும்.

* பூண்டை நேர்வாக்கில் வெட்டிக்கொண்டால் எளிதாக தோலை உரிக்கலாம்.

அகதிகளாக உள்ள தமிழருக்கு மறுவாழ்வு:

ஈழத்தில் போர்நிறுத்தம் கொண்டு வரவேண்டும்!

க.ராசாராம் வேண்டுகோள்!!

சென்னை.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ள தமிழர்களுக்கு மறுவாழ்வு கிடைக்க வேண்டும். ஈழத்தில் உடனடியாக போர் நிறுத்தத்தை கொண்டுவர வேண்டும் என்று க.ராசாராம் வேண்டுகோள் விடுத்தார்.

அறிக்கை

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் க.ராசாராம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சிங்கள ராணுவம் தாக்குதல்

இந்திய மக்களின் கவனமும், தமிழ் நாட்டு மக்களின் எண்ணமும், பொதுத்தேர்தலில் மூழ்கியுள்ள வேளையில், நமது அண்டை நாடான இலங்கையில் தமிழர்கள், சிங்கள அரசால் பல தொல்லைகளுக்கு ஆளாகிக்கொண்டே இருக்கிறார்கள்.

எந்த ஆயுதமும் அற்ற, அமைதியான வாழ்வு வாழ்ந்து வந்த யாழ்ப்பாண தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் கொலை வெறித்தாக்குதல் நடத்தியது. ஏற்கனவே சொத்துக்களையும், சுகங்களையும் இழந்து தவித்துக்கொண்டுள்ள தமிழ் குடும்பங்கள், சிங்கள ராணுவத்தின் வெறித்தாக்குதலை தாங்க முடியாமல் வீடு வாசல்களை அப்படி அப்படியே காலி



க.ராசாராம்

செய்துவிட்டு யாழ்ப்பாணத்தையே வெறிச்சோடிய நகரமாக்கி விட்டு வெளியேறினர்.

இரண்டாம் உலக யுத்தத்தில் கூட இப்படி நகரத்தையே காலி செய்த வரலாறு கிடையாது. தமிழர்கள் தங்கள் உடைமைகள் போனாலும் பரவாயில்லை என்று ஊரையே காலி செய்துவிட்டு ஓடியதற்கு காரணம், சிங்கள ராணுவ வெறியர்கள், தங்கள் பெண்களின் கற்பை சூறையாடி விடுவார்களோ என்பதுதான்.

கொடுமை

ஐக்கிய நாடுகள் சபை இந்த மனிதநேய பிரச்சினையில் தலையிட்டு, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். யாழ்ப்பாண நகரை காலி செய்துள்ள மக்கள் நற்போது வானமே கூரையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். சற்று வாலிப வயதுள்ளவர்கள் தட்ப வெட்ப நிலையை தாங்கிக் கொள்வர். தற்போது மீண்டும் பயங்கர தாக்குதல் என்ன கொடுமை! முதியவர்களும், குழந்தைகளும் இதனை எப்படி தாங்கிக்கொள்ளும். தமிழர்கள் தவிர வேறு எந்த இனத்தினராவது இந்த கொடுமைகளுக்கு ஆளாகி இருந்தால் உலகம் உடனே பொங்கி எழும்.

தென் ஆப்பிரிக்காவில் நிற வெறிப் பாகுபாட்டை இந்தியா பலமுறை கண்டித்தது. ஆனால் ஏனோ இலங்கையில்

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

தொடர் 14

தமிழ் எண்ணை வேண்டும்!

பதின்மூன்று தேடல்களை 'இளைஞ'னில் தந்த இளைஞன் ரமேஷ் வவுனியன், திருமணத்திற்குப் பின் சிறிது காலம் காணாமற் போயிருந்தான். மீண்டும் அவரை தேடிப்பிடித்து, தேடலை தொடர வைத்துள்ளோம். வாசகர்களே! உங்கள் இதயங்களை சமாதானப்படுத்த தயாராகுங்கள். ஏனெனில் இவன் வார்த்தைகளில் சோகம் நிரம்பியிருக்கும். வரிகளில் உங்கள் கண்களில் இருந்து கண்ணீரை வரவழைக்கும் சக்தி கொண்டிருக்கும்.

அன்புக்குரிய அண்ணாவுக்கு!

பாசறையில் யாவரும் நலமே
மன்னார் கடலில் - நான்
மாண்டு விட்டதாக
ஒப்பாரி வைத்தீர்களாமே...!

ஈழத்தாயின் மானம் காக்க
புறப்பட்ட அன்றே - நானும்
"மரணத்தை வென்றவர்கள்" பட்டியலில்...

உங்களுக்கு "தங்கை" வேண்டும்
எனக்கு "அண்ணன்" வேண்டும் - ஆனால்
எங்களுக்கு
அன்னை வேண்டும்
'தமிழ் அன்னை" வேண்டும்!

உங்களுக்குத் தெரியாமல்
பல களங்களில் - என்
துப்பாக்கியும் சிவந்திருக்கிறது

நாளை - நான்
மனிதக் குண்டாகி
எதிரியின் பாசறையினுள்
சிதறினாலும் சிதறலாம்

கலங்காதே!
"என் முடிவு
விடியலுக்கான உந்துதல்"

புத்த பகவான் சிலையருகே
தமிழ்த்தாயின் குழந்தைகளை
"கொதி தாரில்"
நீந்த விட்டார்களே!
அன்று அழுதாயா?

அனுராத புரத்தில்
அரச மரத்தருகில் - தமிழர்
தலையறுத்தார்களே!
அன்று கலங்கினாயா?

மட்டக்களப்பு வாவி அருகே
சாமத்தியச் சடங்கன்றே
தமிழச்சியின் கற்பெடுத்த
சிங்க(ள)த்திற்கு
சிம்மாசனம் போட்டார்களே!
அன்று துடித்தாயா?



பிரவசத்திற்காய் சென்ற
தமிழ்த் தாய் மேலே (பிரம்படியில்)
அன்னிய அரக்கர்கள்
ஆயுத வண்டி ஏற்றி
இந்தியில்
"சுகப் பிரசவம்" என்றார்களே!
அன்று கண்ணீர் வடித்தாயா?

மண மேடையிலே
கணவனின் குருதியெடுத்து
தமிழச்சியின்
"குங்குமம்" கரைத்தார்களே!
அன்று விம்மினாயா?

கிளாலிக் கடலின்
மீன்கள் பெரு(க்)க - தமிழர்
உடல்களை சிதைக்கிறார்களே!
அதற்காகவேணும்.....

இருக்காது... இருக்காது...

அண்ணா!
எனியேனும்
என்னையெண்ணி கலங்காதே!

"எம் சொந்தங்களை
விட்டு விலகுகின்றோம்
எம் சொந்த தேசம்
எமைவிட்டு விலகாமலிருக்க"

அன்புடன் இளைஞனின் 'தேடல்' வாசகர் களுக்கு!
தேடல்த் தூண்டிலில் சிக்கும் உலகுவாழ் ஈழத்தமிழர்களின் இதயக் குமுறல்களே 'தேடல்' பகுதியில் பதிவுசெய்யப்படுகிறது. ஈழத்துப் பெண் போராளி ஒருவர் தனது அண்ணனுக்கு எழுதிய மடலின் கருவே தேடல் பதின்நான்காய் மலர்கிறது.
அன்புடன் - ரமேஷ் வவுனியன்.

ரமேஷ் வவுனியன்

சிரித்து இரன்

கணவன்: அடியே பெத்த அப்பன் என்று கூட பார்க்காம, உதைச்சுட்டாண்டி உன் மகன்.

மனைவி: அப்பவே சொன்னன் அவனை கழுதை கழுதை என்று திட்டாதேங் கன்னு...

ஆசிரியர்: 1905 ஆம் ஆண்டு ஒருவர் பிறந்தால், இப்ப என்ன வயசு?

மாணவன்: மண்டையைப் போடுற வயசு சார்.

-கற்கி, பிராங்பேர்ட்-

ஒருத்தி: நான் கல்யாணம் செய்து 4 வருடமாகிவிட்டது. இன்னமும் எனது மண வாழ்க்கை சந்தோஷமாகத் தான் இருக்கிறது.

மற்றொருத்தி: அதெப்படி சந் தோஷமாக இருக்க முடிகி றது?

ஒருத்தி: ஏனென்றால், எனது கணவன் துபாயில் வேலை செய்கிறார். 2 வருஷத்துக்கு ஒருக்காத்தான் வருவார். வந்ததும், 1 கிழமை தான் நிற்பார்.

மற்றொருத்தி: ???...

-யசோ, ஜேர்மனி-

மனைவி: நம்ம வெளிநாட்டு மகன் "ரீச்சர்" பெண்ணைத் தான் கலியாணம் செய்வா னாம்.

கணவன்: ரொம்பச் சந்தோ ஷம்.

மனைவி: ஏன்?

கணவன்: இனிமேலாவது கொஞ்சம் படிப்பான்.

-குப்பிளான். வை. யோகேஸ்-

சிரிக்க பழகும் ஜேர்மனியர்!

பெர்லின்.

உலகில் சிரிப்பதில் கஞ்சத் தனம் காட்டுபவர்கள் ஜெர்மன் நாட்டுக்காரர்கள். மருந்துக்குகூட இவர்கள் சிரிப்பது இல்லையாம். எப் போதுமே விறைப்பாக கடுகடுப்பாக இருப்பது ஜெர்மானியர்களின் தேசிய குணம். இந்த நிலையை மாற்ற ஜெர்மனியில் இப் போது பெரிய புரட்சியே நடந்து வருகிறது. சிரிக்கக் கற்று கொள்ளுங்கள்! புன்னகை மன்னர் ஆகுங் கள் என்று ஜெர்மன் அரசு மக்களை வலியுறுத்தி வருகிறது. சிரிப்பு சும்மா வந்துவிடுமா என்ன? இதற் காக நாடு முழுவதும் நகைச் சுவை திரைப்படங்கள் அதிக அளவில் திரையிடப் படுகின்றன. அங்கங்கே நகைச்சுவை மன்றங் கள் தொடங்கப்படுகின்றன. ஏன் நகைச்சுவை திருவிழா கூட அங்கே நடத்தப்படு கிறது. இதனால் மெல்ல மெல்ல ஜெர்மானியரிடம் நகைச்சுவை உணர்வு தலை காட்ட தொடங்கி இருக் கிறது. மனம்விட்டு சிரிப் பது உடல் நலத்துக்கு நல் லது என்பதால்தான் ஜெர்மன் அரசு இத்தனை முயற்சி எடுத்து வருகிறது.

சிலோன் சின்னத்துரையும் ஐரோப்பிய ஐயாத்துரையும்

சிலோன் சின்னத்துரை: நான் இண்டைக்கு ரோட்டிலை 10 சதம் விழுந்து கிடந்து எடுத் தனான்.

ஐரோப்பா ஐயாத்துரை: சீச்சீ... யாரும் உப்பிடி எடுப் பாங்களே!

சிலோன் சின்னத்துரை: அப்ப நீங்கள் எண்டா என்ன செய்வீங்கள்?

ஐரோப்பா ஐயாத்துரை: நான் எண்டால் 10 சதத்தை விழுந்து கிடந்து எடுக்க மாட் டன் குனிஞ்சுதான் எடுப் பன்.

சிலோன் சின்னத்துரை: ???!!!...

சி. சி: உவன் சுந்தரத்தான் எல்லோரோடையும் சிரிச்சு, சிரிச்சு கதைச்சவன். இப்ப ஆட்களுக்கு ஏற்றமாதிரி சிரிச்சும், சிரிக்காமலும் கதைக்கிறான். ஏன் எண்டு ஒண்டுமாய் விளங்குதில்லை?

ஐ. ஐ: தன்ர பேர்த்டே காட் குடுக்க முதல் எல்லோ ரோடையும் சிரிச்சு கதைச் சவன். பிறகு பேர்த்டேக்கு வந்த ஆட்களோட சிரிச்சும், வராத ஆட்களோட சிரிக் காமலும் கதைக்கிறான்.

சி. சி: ???!!!...

ஐ. ஐ: எங்கட கணேஷன், கலியாணம் செய்து 5 வரு ஷம் ஆயிட்டுது. குழந்தையும் இல்லை இரண்டு பேரும் வேலை செய்யினம். கேட் டால் இன்னம் இரண்டு வருஷம் பிள்ளை பெறுகிற தைப்பற்றி யோசிக்கிற தில்லை எண்டு சொல்லு றான்.

சி. சி: வாழ்க்கையை நல்லா என்ஜோய் பண்ணப்போ றான் போல கிடக்கு.

ஐ. ஐ: வாழ்க்கையை என் ஜோய் பண்ணுற யோசினை எண்டால், ஏன் இரண்டு பேரும் வேலை செய்வான். 3 சீட்டு போடுறானாம். அது முடியத்தான் மற்றது எல் லாம் எண்டு சொல்லுறான்.

-ரவி செல்லத்துரை-



தேன்கூடு

ஏ.ஜே. ஞானேந்திரன்

இது ஒரு இதிகாசக் கதை - DAEDALUS என்பவன் தன்னுடைய மகனை மிக உயரமாகப் பறக்க வேண்டாம் என்று எச்சரித்திருந்தான். காரணம் மகனுடைய மெழுகிலாலான இறக்கைகள் சூரிய வெப்பத்தில் உருகிவிடும் என்ற அச்சந்தான்! ஆனால், மகன் ICARUS தந்தை சொல் கேளாது அதி உயரப் பறந்து, சிறகு எரிந்து, கீழே உள்ள பெருங்கடலில் வீழ்ந்து மாண்டு போனானாம்!

இது ஒரு பழைய கிரேக்க இதிகாசக்கதை. புதுக்கதையொன்று அண்மையில் அரங்கேறி, உலகின் பலர் நெஞ்சிலும் நீங்காத வலியை ஏற்படுத்தியிருக்கின்றது. அவள் பெயர் ஜெசிக்கா! வயது ஏழுதான்! கொட்டும் மழையில் 1,27 மீற்றர் மாத்திரமே. எடையோ 25 கிலோ. விமானத்தை ஓட்டுமளவிற்கு உயரம் கூடப்போதாது! தன் மகள் ஜெசிக்கா உலகம் மூக்கில் விரல் வைத்து வியக்குமளவிற்கு ஒரு சாதனை செய்ய வேண்டும் என்ற தகப்பனின் வெறியே அந்தச் சிறிசின் உயிரைப் பலியெடுத்திருக்கிறது.

மே. அமெரிக்காவில் இருந்து கி. அமெரிக்கா வரை குறுக்காகப் பறந்து (விமானத்தை ஓட்டி) மகள் ஜெசிக்கா சாதனை படைக்க வேண்டும் என்பது தந்தை Lloyd இன் பேராசையாக இருந்தது. பொதுவாகப் 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு விமானத்தை ஓட்ட 'லைசென்ஸ்' (அனுமதிப்பத்திரம்) வழங்கப்படுவது இல்லை. ஆனால், பத்திரிகைகளுக்குப் பல கட்டுக்கதைகளைச் சொல்லி ஏமாற்றி அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்தையும் ஏமாற்றி, எப்படியோ ஜெசிக்கா விமானத்தை ஓட்ட அனுமதி வாங்கி விட்டார் தந்தை லொயிட்!

ஆனால், விதி சிரித்தது... வாய் விட்டுச் சிரித்தது... கொக்கரித்தது நகைத்தது!

அச்சிறிய விமானம் ஜெசிக்காவுடனும், தந்தை லொயிட்டுடனும், ஜெசிக்காவின் பயிற்சியாளர் Joe Reid என்பவருடனும் ஆகாயத்தில் பறந்தது. நெடுந்துயர்ந்த றொக்கி மலைத்தொடரை அண்டிய பகுதிகளில் பலமாக அடித்த காற்று, குட்டி விமானத்தை ஆட்டுவிக்க, விபத்திற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, பயிற்சியாளர் விமானத்தை ஜெசிக்காவிடம் ஒப்படைத்தார்.



தந்தை Lloyd யுடன் 7 வயது ஜெசிக்கா

தான் பயிற்சி பெற்றுவந்த விமானத்துடன்

வயதில் சாதனை படைக்க ஜெசிக்கா கலிபோர்னியாவில் இருந்தே முதலில் விமானத்தை ஓட்ட ஆரம்பித்தாள். முதற்சுற்று முடிந்ததும், இரண்டாவது சுற்றை Wyoming என்ற இடத்தில் ஆரம்பிப்பது என்றும், இறுதிச்சுற்று இண்டியானா மாவட்டத்தில் ஆரம்பித்து இறுதியான இலக்கு Massachusetts என்றுமே ஏற்பாடாகியிருந்தது! இங்கேயுள்ள Falmouth என்ற பட்டிணத்தில்தான் ஜெசிக்கா பிறந்தவளாம்!

பலத்த காற்றோடு போராடி முதற் சுற்று முடிந்த பின்பு பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறாள் ஜெசிக்கா!

'விமானத்தோடு எங்களை வெளியே வீசுவது போல பலமாக காற்றடித்தது' என்று கூறியிருக்கிறாள் இவள்! இவள் விமானத்தை தரையிறக்க இவளது பயிற்சியாளரே உதவினாராம்! இந்தப்பயிற்சியாளரிடம் பெற்ற 35 மணிநேர பயிற்சியின் உதவியுடனேயே ஜெசிக்கா, விமானம் ஓட்டத்தொடங்கியிருக்கிறாள்! தந்தை லொயிட்டோ பத்திரிகையாளர்களுக்கு 'நாங்கள் ஒரு சாதனை படைக்க முயற்சிக்கின்றோம். அதற்காக முட்டாள்தனமாக நடக்க முற்படுகின்றோம்' என்றில்லை எனக்கூறியிருக்கிறார்.

Cheyenne என்ற இடத்திலுள்ள விமானநிலையத்திலேயே இவர்களது விமானம் தரையிறக்கப்பட்டது. படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் என்று ஒரே அமர்க்களம். அடுத்தநாள் காலை 8.20 க்கே இரண்டாவது சுற்று ஆரம்பமாக இருந்தது. ஆனால், அடுத்த நாளோ படுமோசமான காலநிலை! இடியோடு கூடிய புயல்ஸ 40 தொடக்கம் 48 கி. மீற்றர்/மணிக்கு என்ற வேகத்தில் பலத்த காற்று வீசியடித்தது! இப்படியொரு மோசமான காலநிலையில் விமானத்தை ஓட்டிச்சென்றது தற்கொலைக்கு ஒப்பானதே! ஒரு நல்ல அனுபவசாலி ஜெசிக்காவுடன் கூட இருந்திருந்தால் விமானத்தைத் தரை இறக்கியிருப்பார். ஆனால், மாறாக இயற்கையோடு போராடும் வீம்புடன் விமானத்தை ஓட்ட முயன்று, விமானநிலையத்திலிருந்து 1.5 கி. மீ வடக்கேயிருந்த ஒரு ஒற்றை மாடி மீது தலைகுப்புற வீழ்ந்து வெடித்ததுதான் மிச்சம்!

ஜெசிக்கா பிறந்தபோதே, ஜெசிக்காவின் பெற்றோர் 'புரட்சியில்' இறங்கியிருக்கிறார்கள். எந்த டாக்டரினதோ, மருத்துவிச்சியின் உதவியோ இல்லாமல் ஜெசிக்காவைப் பெறறெடுப்பது என்று ஒரு வைராக்கியத்துடன், ஜெசிக்காவை தாய் பெற்றெடுத்திருக்கிறார். தாய் லீசா இது பற்றிக்குறிப்பிடுகையில் தன் மகள் 'மிதக்கும் உணர்வோடு முழுச்சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார். வீட்டில் ஒரு தொலைக்காட்சிப்பெட்டிகூட இல்லாமல்தான் ஜெசிக்காவும் தாயும் வாழ்ந்திருக்கிறார்

தொடர்ச்சி 22ம் பக்கம்...



குருவி தலையில் பனங்காயா?

இவளும் பறந்திருக்கிறாள் சிறகுகளுடன் அல்ல. சிறகுகள் கொண்ட விமானத்தை ஓட்டியபடி! ஒற்றை என்ஜினை மாத்திரமே கொண்ட இந்த விமானத்தின் பெயர் CESSNA 177 B! இந்தச் சிறிய விமானம் தலைகுப்புற நெடுஞ்சாலையில் விழுந்து வெடித்துச் சிதறி, இந்தச் சிறிசின் உயிரைக் குடித்திருக்கிறது!

அவளது உயரம் வெறும் 1,27 மீற்

அமெரிக்க கண்டத்திற்கு குறுக்காகப் பறக்க நினைத்த 'பைத்தியகாரத்தனம்' ஏப்பிரல் 15 இல் தான் ஆரம்பமாயிற்று. மிக இளம்

உயிரினங்களே இல்லாத உப்புக் கடல் ஒன்று ஜோர்டான் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் எல்லையில் உள்ளது. இக் கடலில் யாராலும் நீந்த முடியாது.

அறிவியல் உலகம்

முடியாதது எது?

நோய் கட்டுப்பாட்டு மையம் அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் உள்ளது. அங்கு, புகைப்பழக்கம் உள்ளவர்களைப் பற்றிய அராய்ச்சி நடந்தது. புகைப்பழக்கம் உள்ள ஏறக்குறைய 70 சதவிகித மக்கள் அதாவது 4 கோடி பேர் அப்பழக்கத்தை விட்டுவிட நினைக்கிறார்களாம். அதில், பாதிபேர் விட்டுவிட்டதாக தெரிவிக்கிறது. ஒவ்வொரு வருடமும் 35 சதவிகித அமெரிக்கர் கள் புகைப்பழக்கத்தை விட்டுவிட முயற்சி செய்கிறார்கள். ஆனால் இரண்டரை சதவிகி தம் பேர்தான் அதில் வெற்றி பெறுகிறார்கள். அங்குள்ள இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் புகைப் பழக்கத்தை விட்டுவிட்டனர். அதே நேரத்தில் நம்நாட்டில் நாளுக்கு நாள் புகைப்பவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது!

பற்களில் கறையா?

பற்களின் அடியில் உணவுத் துணுக்குகள் தங்கி விடுவதாலும், புகையிலைச்சாறு, காபி, டீ போன்றவைகளின் கறைகள் படிவதாலும் பற்களின் வெண்மை நிறம் மாறி மஞ்சள் நிறத் திற்கு வந்துவிடும். இவை பார்க்க அரு வறுப்பாக இருப்ப தோடு, பற்சிதைவுக்கும் காரணமாக இருக்கும். இவைத் தடுப்பதற்காக அமெரிக்க மருத்துவர் கள் ஒரு புதுவழியை

கண்டுபிடித்துள்ளார்கள். 'அச்சு' ஒன்றை தயாரித்து அதில் கறைகளை அப்புறப்படுத்தும் மருந்துகளை கொட்டி- மேல்மற்றும் கீழ்வாய் பற்களுடன் சேர்த்து கட்டிவிடுகிறார்கள். இது தானாகவே செயல்பட்டு கறைகளை நீக்கி பற்களை வெண்மையாக்குகிறது. இந்த அச்சை யார் வேண்டுமானாலும் பொருத்திக் கொள்ளலாம்.

ஜார்ஜியா மாநிலத்தில் உள்ள மருத்துவப பல் கலைக் கழகத்தில் வித்தியாசமான ஒரு ஆராய்ச்சி செய்யப்பட்டது. எதைப்பற்றி தெரியுமா? 'சாப்பாடு' பற்றித்தான். மக்கள் எந்தெந்த நேரத்தில் எப்படியெல்லாம் சாப்பிடுகிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்ந்தபோது, தனியாக இருக்கும் போது குறைவாகவும், ஒரு நபருடன் இருக்கும்போது அதை விட 28 சதவிகிதம் அதிகமாகவும் சாப்பிடுகிறார்கள். இருவர் இருந்து விட்டால், தனியாக சாப்பிடும்போது உட்கொள்ளும் உணவைப்போல 48 சதவிகிதமும், கூட்டத்தில் அமர்ந்து சாப்பிடும் போது 76 சதவிகிதம் அதிகமாகவும் உண்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். கூடி சாப்பிடும்போது மனிதன் அதிக உணவை காலி செய்கிறான் என்பதை கண்டுபிடித்து டாக்டர் பட்டம் பெற்றிருப்பவர் ஜான் டி கேஸ்ட்ரோ என்பவர்.

புறாக்களின் தலையில் காந்த சக்தி இருப்பது உங்களுக்குத் தெரியும். இந்த சக்தியால் தான் அது, தான் சென்ற வழிகளைத் தெரிந்து கொண்டு திரும்பி வந்து விடும். வார்விக்ஷர் என்ற இடத்தில் நடமாடும், தொலைபேசிகள் (மொபைல் போன்) அதிகமாக இருக்கின்றன. இவைகளின் இரைச்சல் புறாக்களைக் குழப்பி விடுவதால் புறாக்கள் வழி தவறிப்போய் விடுகின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

இன்று மேல்நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் இசையில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். ஆனாலும், மேல்நாட்டு முறைப்படியே கற்பதனால் நம் கர்நாடக இசையை (கர்நாடக இசை யென்றால் கர்நாடக நாட்டு இசை அல்ல, சுத்த மான, பொருமையான தமிழிசை என்பதே அதன் பொருள்) புரிந்து கொள்வதில்லை. அதனையும் தகுந்த குருவிடன் அல்லது நல்ல புத்தகங்களின் துணையுடன் இசையமைத்தால் எவ்வளவோ இனிமையாக எத்தனை மெட்டுக்களிலும் எடுக்கலாம். நம் இசையும் குன்றாது வளரும். இசை பயில்பவர்கள் C, D, E, F, G, A, B என்ற வரிசையில் பயிலுகின்றனர். தமிழில் சொல்லச் சொன்னால் ஸ, ரி, க, ம, ப, த, நி என்பார்கள். இதுவும் தமிழ் குறியீடுகள் அல்ல. இதோ வட மொழி குறியீடுகளுக்கு (சுரங்களுக்கு) தமிழில், இனிமைத்தமிழில்!

வடமொழி		தமிழ் மொழி	
ஸட்ஜம்	= ஸ	குரல்	= ஆ
ரிடபம்	= ரி	துத்தம்	= இ
காந்தாரம்	= க	கைக்கிளை	= ஈ
மத்யமம்	= ம	உழை	= ஏ
பஞ்சமம்	= ப	கிளி	= ஐ
தைவதம்	= த	விளரி	= ஓ
நிஷாதம்	= நி	தாரம்	= ஔ

இடைப்பட்ட காலத்தில் நேர்ந்த கடல் கேள்களாலும் பல நாட்டு அரசர்களின் படையெடுப்பாலும், உள்நாட்டவர் கவனக்குறைவாலும் அந்நிய மொழி தமிழில் புகுந்து இன்றுவரை நிலைத்துவிட்டது. நாம் முயன்றால்; ஏழு சுரங்களை கொண்டு லட்சக்கணக்கான இராகங்களையும் எந்த நாட்டிலும் இல்லாத அளவு கூடிய தாளங்களிலும் கொண்ட நம் இசையை முன்னுக்கு கொண்டு வரலாம். எல்லா நாட்டினையும் விடவும், எல்லா நாட்டு இசை வல்லுனர்களாலும் அதிசயத்துடனும், விருப்புடனும் நோக்கப்படுவது நம் கர்நாடக இசையே! இது உலக இசை வல்லுனர்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றே! தமிழ் இசை கர்நாடக இசை என்றால்; இந்தியாவில் உள்ள மற்ற மொழி இசையின் பெயர்; இந்துஸ்தானி இசை, இதுவும் தமிழிசைக்கு அடுத்ததே!

ராஜா சிவகுமார்

ஐடியா ஐயாசாமி

ரவிசெல்லத்துரை எழுதும் நகைச்சுவைத் தொடர்...

வணக்கம் தமிழ் மக்களே! உங்களை ஒவ்வொரு மாதமும் சந்திக்கேக்க எனக்கு வலு புழுகம் ஏனேண்டால், இங்க எல்லாத்துக்கும் "அப்பொயின்ற் மென்ற்" வச்சுத் தான் சந்திக்க வேண்டும். எங்கட ஊரிலை எண்டால், கண்ட கண்ட நேரம் ஆற்றையன் வீட்டை போய் யாரையும் சந்திக்கலாம். இப்படி வசதி இருக்கிற படியால் தான் "துறந்த வீட்டுக்க நாய் உள்ளட்ட மாதிரி" என்ற பழமொழி வந்ததோ தெரியேல்லை.

இந்த நாட்டிலை ரெலி போன் வசதி இருக்குது. ரெலிபோன் பண்ணி இன்ன நேரம் வாரன் எண்டு சொல்லிப்போட்டு போய் சந்திக்கலாம் கண்டியலே. எங்கட ஊரிலை அப்படி வசதி இல்லை பாருங்கோ. வசதி இருந்தால் எல்லாம் தானா வரும் போலகிடக்கு.

ஆனால், இந்த நாட்டுக்காரன் வசதி இருக்கு எண்டுட்டு கண்டபடி எதையும் செய்யிறது இல்லை பாருங்கோ. ஏனெண்டால் வெள்ளைக்காரன் மற்றவங்களுக்காக வாழுறதில்லை பாருங்கோ. தனக்காகத் தான் வாழுறான்.

எங்கட தமிழ்ச்சனம் மற்றவங்களுக்காகத்தான் வாழுகினம். இதை கன விசயத்திலை பார்த்திருக்கிறன் கண்டியலே.

ஆராவது எங்கட பெண்டுகள் 21 பவுனிலை தாலிக் கொடி போட்டால் உடனை மற்ற பெண்டுகள் 27, 31 எண்டு போட துவங்கி விடுவினம். ஆராவது 20 ஆயிரத்திற்கு கார் வாங்கிச்சினம் எண்டால், மற்றவை 25 ஆயிரத்திற்கு வாங்க துவங்கி விடுவினம். இந்த புத்தி எப்படித்தான் எங்கட சனத்திட்ட வந்தது எண்டு விளங்குதில்லை. இதுக்கு ஏதும் மருந்து இருந்தால், இந்தமாதிரி குணம் உள்ள ஆட்களுக்கு வாங்கிக் குடுக்கலாம்.

சிலோனிலை பிரச்சனை எண்டு யேர்மன், சுவிஸ், பரீஸ், டென்மார்க்கு எண்டு ஓடிவந்து, வந்த இடத்திலை வசதியாய் வாழுகிற எங்கட சனம் -பிறகு என்ன செய்யினம், பிள்ளைகள் இங்கிலீசு படிக்க வேணும் எண்டுட்டு கனடாவுக்கும், லண்டனுக்கும் ஓடுதுகள். படிக்கிற பிள்ளைக்கு எங்க இருந்தாலும் ஒண்டுதான். அதுக் கேற்ற வசதிகளை தாய், தகப்பன் செய்யிறத விட்டிட்டு இப்படி நாடோடியாய் திரியிறதை பார்க்க எவ்வளவு கஷ்டம் கண்டியலே. முயல் பிடிக்கிற நாயை முகத்திலை தெரியும் எண்ட கணக்கா, படிக்கிற பிள்ளை எங்க இருந்தாலும் படிக்கும். அதுக்கு ஏற்ற வசதியை செய்து குடுக்க வேணும்.

போற போக்கிலை தமிழ் ஈழம் கிடைச்சாலும் சனம் அங்க போகாது. ஏனேண்டால் அங்க இங்கிலீசு இல்லை என்பினம் போல கிடக்கு.

யேர்மன், பிரான்ஸ், சுவிஸிலை உள்ள வெள்ளைக்காரன்கள் எல்லாம் லண்டனுக்கும், கனடாவுக்கும் போயே இங்கிலீசு படிச்சவங்கள். அவன் அவன் தன்ர நாட்டிலை இருந்து கொண்டு மற்ற பாஷைகளையும் படிக்கிறான்கள். எங்கட சனம் நாட்டுப் பிரச்சனையை சாட்டி இங்க வந்திட்டு பிறகு இங்கிலீசு பாஷையை சாட்டி நாடோடியாய் திரியுகள்.

அதைவிட இன்னொரு பகிடி என்னெண்டால், இங்க வந்த ஆம்பிளையள் கன காசு செலவழிச்சு மனுசி பிள்ளைகளை இங்க கூப்பிட்டுட்டு பிறகு கன காசு செலவழிச்சு கனடா, லண்டன் என்று அனுப்பிப் போட்டு தனிய இருந்து மாடாய் உழைக்குதுகள். இதுவும் ஒரு வாழ்க்கையே? குடிக்கிறது கஞ்சியோ, கூழோ குடும்பமாய் ஒரு இடத்திலை இருந்து குடிக்கிற சந்தோசம் வருமே பாருங்கோ. இதை சொன்னால் கோவப்படுவினம். நாங்கள் உழைக்கிறது பிடிக்கேல்லையோ எண்டு கேட்பினம். இதை எப்படி அவைக்கு விளங்கப்படுத்திறது எண்டு புரியுதில்லை.

ஐடியா குடுக்கிற ஐயாசாமிக்குக் கூட இந்த நிலையை மாற்ற ஒரு ஐடியா வருகுதில்லை பாருங்கோ. இதுக்கு நீங்கள் தான் ஒரு ஐடியா சொல்லவேணும்.

எனக்கு நேரம் போகுது. சோசல் அப்பொயின்ற் மென்ற் இண்டைக்குத் தான். அதோட சோசல் வேலை ஒண்டு தாறன் எண்டவங்கள். அப்ப நான் வாறன் பேந்து சந்திப்பம்.

எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும். ■

அர்த்தமற்ற இந்துமதம்

தொடர் - இரா.மோகனராஜா

உலக மதங்களிலேயே காட்டுமிராண்டித்தனம் கொண்ட மதம் இந்துமதம் என்று, இரண்டு வருடங்களுக்கு முன் 'பாபர் மசூதி' இடிக்கப்பட்ட போது உலகமக்களின் கணிப்புக்கு உள்ளானது. கிழட்டு அரசியல்வாதியான 'அத்வானி' தலைமையில் இஸ்லாமியர்களின் மிகப்பழைமை வாய்ந்த புனிதஸ்தலம் இடித்து நொருக்கப்பட்டது. மசூதியை இடிக்கப்பயன்படுத்திய அத்தனை கைகளையும் வெட்டியெறியாமல் விட்டது அரசாங்கம் செய்த மிகப்பெரிய தவறு. பாபர் மசூதி கட்டப்பட்டிருந்த இடத்தில்தானாம் 'ராமர்' பிறந்தார். அது ராமர் பிறந்த புண்ணிய பூமியென்று இந்தியப்பிற்போக்கு இந்துக்கள் பலர் பிதற்றுகிறார்கள். வான்மீகியின் கற்பனையில்த் தோன்றிய கதைதான் 'இராமாயணம்' அதைப்போய் உண்மைக்கதையென்று நம்பி ராமனையும், சீதையையும் தெய்வங்களாக நினைக்கும் அறிவிலிகள் இருபத்தொராம் நூற்றாண்டை நோக்கும் இந்த 'இன்டர்நெற்' காலத்திலும் இருக்கிறார்களே!

இராமாயணத்தை வெறும் கதையாகப்படித்துவிட்டுப் போவதை விட்டு, கதையையும், பாத்திரங்களையும் நிஜப்படுத்த முற்படுவது அறிவீனம். இந்த இடத்தில்த்தான் ராமர் பிறந்தாரென்று அடம் பிடிப்பது எந்த விதத்தில் நியாயம்? கோசலைக்குப் பிரவசம் பார்த்தது வான்மீகியா? அத்வானியா?

பகுத்தறிவிற்கும் இந்து மக்களுக்கும் வெகுதூரம், ஏன் இதைச் செய்கிறோம் என்று யோசிப்பதில்லை. அவன் செய்கிறான் அதனால்த்தான் நானும் செய்கிறேன் என்ற மனோநிலைதான் அதிகம். வழிபாட்டு முறையும் சரி விரத அனுஸ்ட்டான முறையும் சரி பலருக்கு அதன் வரைவிலக்கணங்கள் புரியாமலேயே அதைச் செய்ய முற்படுகிறார்கள். விரதமென்றால் என்னவென்று கேட்டால், சாப்பிடாமல் இருப்பது என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

விரதமென்றால் என்ன?

உணவைச் சுருக்கியேனும் அல்லது முற்றாக விடுத்தேனும் ஐம்புலன்களையும் அடக்கி மனம் பொறிவளிச் செல்லாமல் இறைவனைத்தியானிப்பது என்பது

விரதத்தின் வரவிலக்கணம்.

யாரிதைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். விரமிருந்து கொண்டு ஆலயத்துக்குச் சென்றாலே மனம் பொறிவளிச் சென்றுவிடும். இளம் வயது வாலிபன் ஒருவன் விரதம் அனுஸ்ட்டித்து வழிபாடு செய்வதற்கு ஐம்புலன்களையும் அடக்கி ஆலயத்துக்குச் செல்கின்றான் என்று வைத்துக்கொண்டால், ஆலயவளவிற்குள் அரைப்புடவை கட்டி, அரைமுழத்தில் லோலாக்குப்பூட்டி ஆடியசைந்து அழகான இளம் குமரி ஒருத்தியைக் கண்டுவிட்டால் அவன் தனது ஐம் பொறிகளையும் இழந்து அப்பெண்ணிடத்திலேயே மனதைப்பறி கொடுத்து விடுவான். பிறகெங்கே விரதம்?

இளம் வயதினர் மனசை அடக்குவது கஸ்ட்டமான காரியந்தான் என்ற சமாதானத்தை முன் வைத்து, நடுத்தர வயதுத்தாய்க் குலங்களை எடுத்துப்பார்த்தால் யார், யார் என்ன நகை, புடைவை அணிந்து வந்திருக்கிறார்கள் என்ற கணக்கெடுப்பை மனப்பாடமாக்கிவிட்டுத்தான் பூஜையைப் பற்றிச் சிந்திப்பார்கள்.

பெரும்பான்மையானவர்கள் பூஜை முடிந்து வீடு திரும்பும்போது சுகமாகக் கொறிப்பதற்காக மறக்காமல் கடலைப்பொதியும் வாங்கிக் கொண்டு வருவார்கள்.

ஆறாம் திருவிழா அன்றே ஆட்டுக்கடாவுக்கு அச்சவாரம் கொடுக்கும் ஆண்களும் நிறையப்பேர் உண்டு.

எல்லா மக்களும் பக்திப்பரவசத்தில் ஆலயத்துக்குச் செல்கிறார்கள் என்பது அப்பட்டமான பொய். திருவிழாக்காலங்களில் அரைசாசிக்கும் மேற்பட்டவர்கள் 'சைட்' அடிப்பதற்காகவே பக்தர்கள் என்ற பெயரில் விழுந்தடித்து வருகிறார்கள்.

ஆண்களுக்கும் பெண்களுக்கு தனித்தனியே வழிபாட்டு நேரத்தை ஒதுக்கி, பெண்கள் பிரார்த்தனை நேரத்தில் ஆண்கள் வரக்கூடாது என்றும், ஆண்கள் பிரார்த்தனை நேரத்தில் பெண்கள் வரக்கூடாது என்றும் வரையறை வைத்தால், இளம் வயதினர் யாருமே கோவில்ப்பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கமாட்டார்கள்.

நமது மனம்தான் ஆலயம், நமது குடும்பம்தான் ஆலயம், குடும்பத்தைச் சரியாகக் கவனிக்காமால் மனசை சாக்கடை போல் வைத்துக்கொண்டும், பெரிய பெரிய ஆலயங்களைத் தரிசிக்க ஊருராகச் செல்வது கையிலே விளக்கை வைத்துக்கொண்டு வெளிச்சத்தைத் தேடி அலைவது போலாகும். ■

கண்ணீரில் முடிந்த காதல் நாடகம்!

நெடுஞ்சாலையின் நடுவே பதிதாபமாக இறந்து கிடக்கும் தன் காதலியோடு.....

ஹம்பேர்க் (Hamburg) நகரத்தில் உள்ள ஒரு நெருக்கடியான போக்குவரத்து உள்ள (Highway) நெடுஞ்சாலையில் ஒரு அணில்க் காதலர்கள் ஒருபக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு நெடுஞ்சாலையைக் கடந்து செல்லவேண்டும்.

இருவருமாக பாதையைக் கடக்க முற் பட்டபோது -வேகமாக வந்த ஒரு மோட்டார் வண்டியின் சக்கரத்தினுள் அணிக்காதலி சிக்குண்டு, நசிபட்டு, நெரிபட்டு பரிதாபமாக இறந்து விடுகிறாள்.

அணில்க்காதலன்...? "சிக்னல்" (ச மிக்ஞை விளக்கு) விளக்கு சிவப்பாகி வாக னங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் அந்த சிறிய நேரத்தில் பாதையின் நடுவே இறந்து கிடக் கும் தன் காதலியை நோக்கி ஓடிச்சென்று, முகத்தோடு முகம் வைத்து சோகத்தோடு அழுகிறான்..... மீண்டும் சிக்னல் விளக்கு பச்சையாகி கார்கள் வேகமாக புறப்படவே கரையை நோக்கி ஓடி வருகிறான்.

சிக்னல் விளக்கு சிவப்பாகி வாகனங் கள் நிறுத்தப்பட்டிருக்கும் போது காதலியை



மோட்டார்வண்டிகள் வேகமாக புறப்பட்டு வரவே கரையை நோக்கி ஓடுகிறான்.....

நோக்கி ஓடுவதும், சிக்னல் விளக்கு பச் சையாகி வாகனங்கள் புறப்படும் போது கரையை நோக்கி ஓடுவதுமாக இருந்த இந்த அணிலின் இதயத்தை உருக்கும் நிலமையை தற்செயலாகக்கண்ட புகைப்படக்கலைஞரான கிறிஸ்ரியான் (Kristijan) பாதையின் நடுவே இறந்து கிடந்த காதலியை எடுத்து வந்து கரையில் வைத்து விடுகிறார்.

ஆனால், அணில்க் காதலனோ மீண் டும் தன் காதலி இறந்து கிடந்த, இரத்தக் கறை படிந்து இருக்கும் அந்த இடத்தை நோக்கி ஓடினான்.

இந்தத்தடவை வாகனங்கள் வேகமாக புறப்பட்டபோது அவனாலும் உயிருடன் பாதையின் கரைக்கு திரும்பி வரமுடிய வில்லை.....

இந்த உண்மையான காதலர்களின் மரணத்தையிட்டு "இளைஞன்" தனது இத யத்து அஞ்சலியை செலுத்துகின்றான்.

(-ரஞ்சினிப்பிரியன்-)

நெடுஞ்சாலையின் கரையில் இறந்து கிடக்கும் காதலி.....

இனத்துவேசி அல்லன் நான்...

நாம் ஒன்றும்
உங்களுக்கு எதிரானவர் அல்ல
ஆனால்...!

நாம் இந்த நாட்டைக் கட்டி எழுப் பியோர்.
நாம் எம்மை அடையாளப்படுத்த வேண்டும்.
நீங்கள் இங்கு வருகின்றீர்கள்
ஆடம்பர விடுதிகளில் வாழ்கின் றீர்கள்
நிங்கள் உண்ணும் பண்டங்கள்
மாடிப்படிகளில் நாற்றமெடுக்கின் றன.

நீங்கள் விசித்திரமான
உடைகளை அணிகின்றீர்கள்
விசித்திர மொழியில்
உரத்த தொனியில் பேசுகிறீர்கள்
உங்கள் கடவுள்கள் விசித்திர மானவர்கள்
நிங்கள் நல்லவற்றையெல்லாம்
எம்மிடமிருந்து பிடுங்கிக் கொள் கிறீர்கள்!
எல்லாவற்றுக்கும் மேலாக
எம்மால் வெறுக்கப்பட்ட வேலைகளை
எம்மிடமிருந்து பிடுங்குகிறீர்கள்!

மனிதர்கள் வாழமுடியா
வீடுகளையெல்லாம்
உயர்ந்த தொகைப் பணத்திற்கு
அபகரிக்கின்றீர்கள்.
நாமோ 'வீடற்றோர்' என
அழைக்கப்படுவதையே விரும்பு கின்றோம்.

நீங்கள் மீண்டும், மீண்டும்
எம்மிடமிருந்து பிடுங்குகின்றீர் கள்!
உங்கள் பெட்டிக் கடைகளை
விடியலின் முன்பு - முதல்
இரவின் அமைதிவரை திறக்கிறீர் கள்.

நாங்கள் ஐந்துமணியென்றால்
கடையடைப்போம்
வந்து உணவருந்தி
குந்தியிரந்து தொலைக்காட்சி
கொஞ்சம் மது சுவைப்போம்!

எம்மிடம் மீண்டும், மீண்டும்
பிடுங்குவது கொஞ்சமா?
நாம் வாய்திறக்கும் போதெல்லாம்
இயவெறியர்களாக முத்திரையி டப்படுகின்றோம்!
ஆனால் நீங்களோ
எமது வேலைகள்
எமது செல்வம்
எமது வீடுகள்
எமது பண்பாடு
இவை மட்டுமா
எமது பெண்களையுமல்லவா
பிடுங்குகிறீர்கள்
நான் இனத்துவெசி
அல்லன்.
ஆனால்....

-றூசர் இ ஸ்னோ என்ற ஒரு நோர்வேக்காரரின் குமுறல் இது-

சுட்ட மண்ணும் பச்சை மண்ணும்

வண்ணை ஆனந்தன்

பழிவாங்கும் வெறிமூலம் பலவழிகளில் என்னைப்பணியவைக்க கடும் முயற்சி செய்து பார்த்தது சிங்களவரசு!

அவர்கள் எடுத்த அத்தகைய நடவடிக்கைகள் எல்லாம், ஆலவிதையாக என்றோ என் நெஞ்சில் தூவப்பட்ட இலட்சியத்துக்கு உரமாக மாறி பெரும் ஆலவிருட்சத்தை வளர்த்துத்தந்தது தான். அது விழுதுகள் பல கண்டு கடும் புயலையும் சுற்றியழிக்கும் சூறாவளியையும் துச்சமென மதித்து உலகுவியக்க ஓங்கித்தான் நிற்கிறது!

இன்றோ! அந்த ஒற்றை ஆலமரம் பெருந்தோப்பாகி பெரும் நிழல் தருதோட்டமாகிவிட்டது. சங்கு சுட்டால் வெண்மை தரும்! தங்கம் தீயில் குளித்தாற்தான் ஒளி வீசும்! சுட்ட சங்காய் நான் மாறிட, புடம் போட்ட தங்கமாய் நான் மிளிர்ந்திட, ஆலந்தோப்பின் தோட்டக்காரிகளில் ஒருவராய் நான் வளர்ந்திட இதோவொரு சம்பவம்!

சிங்களத்து வெலிக்கடைச்சிறையென்னைத் தன் கோரவாய் திறந்து விழுங்குவதற்கு முன் அரசு ஊழியனாய் சிங்களநாட்டின் பல பகுதிகளிலும் கடமை புரிந்தவன் நான்.

பொதுவாகவொரு அரசு ஊழியன் எப்பகுதியிற் கடமைபுரிந்தாலும் குறைந்தது மூன்று ஆண்டுகளாகவது அதே பகுதியில் கடமையாற்ற அனுமதிக்கப்படுவதுண்டு. ஆனால், நான் மட்டும் என்றுமே இதற்கு விதிவிலக்காகத்தப்பட்டேன். எந்தர்ச் சந்தர்ப்பத்திலும், நான் என் இனமானவுணர்வுகளை விட்டுக்கொடுக்காததும், எவனுக்கு அஞ்சியும் நடக்க மறுத்ததுமே சிங்களவரசின் பழிவாங்கும் நடவடிக்கையாக அடிக்கடி இட மாற்ற உத்தரவுகளைச் சந்திக்க வேண்டி வந்தது. எவ்வகையிலும் என்னைப்பணிய வைக்க வகையறியாததாலோ என்னவோ பிற்காலத்தில் ஆறு ஆண்டுகளுக்கும் மேல் வெலிக்கடைச்சிறையில் பூட்டி வதைத்தும் பார்த்தது இந்த சிங்களவரசு.

வென்றவர் யார்? தோற்றவர் யார்? ஆட்டம் தொடர்கிறது! முடிவைத்தான் பார்ப்போமே!!

நான் இரத்மலானையில் (கொழும்பு) பணியாற்றிய காலத்திலும் வழக்கமான பழிவாங்கும் படலத்தில் அத்தியாயமாய் தந்திமூலம் இடமாற்றவுத்தரவு என் கையில் திணிக்கப்பட்டது. 'இதுவென்ன ஆறுமாதத்தில் உனக்கிப்படி?' - இது நல்ல நண்பர்களின் வேதனை. 'சனியன் தொலைந்தது' -இது சிங்கள நண்பர்களின் மகிழ்ச்சி ஆரவாரம்.

வெள்ளவாயா, இது நான் கடமையைப்பொறுப்பெடுக்க வேண்டிய புதிய ஊர். அது எங்கு இருக்கிறது? எப்படி போய் சேர்வது? எனக்கு அது அப்போது தெரியாது. இதுபோன்ற சிங்களவரசின் கொடுமைகளையெல்லாம் சந்தித்த அனுபவம் உண்டல்லவா! சித்திரத்தன்ன தாமரையென கம்பன் காடு புறப்பட்ட இராமனை வர்ணிக்கிறாள். வெள்ளவாயா என்பது மொகாரைகலை மாவட்டத்தில் அமைந்த அடர்ந்த காடுவென அறிந்ததும், நானும் சித்திரத்தன்ன தாமரை போன்ற இராமன் தான்! இராமனுக்கு சீதையும் இலக்குவனனும் துணை, எனக்கு எப்போதும் ஒரு இலகுவில் தூக்கிச்செல்லக்கூடிய பிரயாணப்பை மட்டுமே துணை. காட்டில் இராமனுக்கு குரங்குக்கூட்டமும் துணையானது. இங்கேயெனக்கு சிங்களக்காட்டுக் குரங்குகள்கூட சிங்களவன் போய் தொல்லை தான்!

எங்கு வேலை மாற்றம் பெற்றுச் சென்றாலும், முதல்நாள் என் தேசிய ஆடையில் செல்வது என்பதை எப்போதுமே உறுதியாய்க் கடைப்பிடிப்பவன் நான். இது ஒரு ஆபத்தான இடம் எனக்கூட நான் கவலைப்படவில்லை, அன்றும் அப்படித்தான்!

சிரமத்தின் மத்தியில் வழிகேட்டு அந்த அடர்ந்த காட்டில் தகரத்தால் அமைக்கப்பட்ட அந்த நிர்மாணப் பெலாறியியலாளர் அலுவலகம் போய்ச்சேர்ந்தேன். போகும் வழியெல்லாம் காட்டுக் குரங்குகள் மட்டுமல்ல காட்டுச் சிங்களவன் கூடத்தான் அந்தக் கோலத்தில் ஒருவனைக்கண்டிராததால் முதல்முதல் கொழும்புக்கு வந்த சிங்களவன் நிலையில் நின்றனர். ஆத், இமை இருப்பதை அவர்கள் கண்கள் சில நிமிடங்கள் மறந்து நின்றன! அலுவலகம் சென்ற நான் முதலில் யட்டவர என்ற தலைமை எழுதுவினைஞரைச் சந்தித்து என் வேலை மாற்ற உத்தரவைக் கையளித்தேன். என் பொறுப்பினையும் கையேற்றேன். எனக்கு ஒதுக்கப்பட்ட விடுதி குனுக்கட்டியா என்ற கடும் காட்டுப்பகுதியில் அமைந்திருக்கின்றது என்பதையும் அறிந்து கொண்டேன். மலேரியா வேகமாகப் பரவியுள்ள பகுதியென்பதால் முதல்நாளே கடமை கையளிக்கப்பட்டதுடன் நுளம்புவலையும் ஒருபெட்டி மலேரியாத் தடுப்புக் குளிகைகளும் பண்டகப் பொறுப்பாளர் (Store Keeper) சுமதிபாலாவால் தரவும் பட்டது. எல்லாமே சித்திரவதைதான். என்னை அழவைக்கப் பார்த்த சங்களம் அழப்போகும் நாள் அதிதூரத்தில் இல்லையென என்மனம் கூறியது.

முதல்நாள் அல்லவா? என் அனுமதியைக்கூட கேட்காமல் என் கண்கள் பிரயாணக்களையால் தானாக தூங்கவாரம்பித்தது. நுளம்புவலையில் உன்னை மூடி வைத்தாலும் நான் விடப்போவதில்லையென நுளம்புகள் முரசறைந்து என்னுடன் வலியப்போருக்கு வந்தன. ஆயுதம் வேண்டாம் அன்புவழியே போதும். பேசித்தீர்ப்போமேயென்றாலும், சிங்களவன் எடு ஆயுதத்தையென்றல்லவா நம்மைப்பார்த்துக் கூறுகின்றான். இந்த சிங்கள நுளம்புகளும் யுத்தம் வேண்டாம் நீ அழிந்துவிடுவாய் என்று நான் கூறினாலும் என்னைவிட்டபாடில்லை.

நுளம்பு கொட்டக்கொட்ட ஒதுங்கிப்போவது கோழைத்தனம் அல்லவா? சிங்களவனுக்குப் புரியாதது போல் என் ஆண்மை சிங்களத்து நுளம்புகளுக்கும் புரியவில்லை. ஆண்மையைக் காட்டினேன், அடங்கியது நுளம்புக்கூட்டம். இதனால் ஓய்வு கேட்ட கண்கள் ஆத்திரம் தீர்ந்த பின்பும் மூடுவ

> **அனே! பற தெமிலவாகே மட்ட கறதர தெனவானே!**

தாய்க்காணோம். சிகரட் பிடிப் போமாயென எண்ணி அதைத் தேடினால் அதுவும் தீர்ந்து போயிருந்தது. விடுதிக்கு வரும் போதே அக்காட்டில் ஒரேயொரு பெட்டிக்கடை இருந்தது ஞாபகத்திற்கு வர மேடும் பள்ளமுமாய் இருந்த நிலத்தில் கால்வைத்து கடையை நோக்கிச்சென்றேன். பெட்டிக்கடையிலோ இதுவரை சிகரட் யாராலும் தேடப்படாத வொரு பொருளாக விருந்ததால் எனக்குக்கிடைக்கவில்லை. பீடிதான்! விடுதி நோக்கி ஆலில்லா ஊருக்கு இலுப்பம் பூ சர்க்கரையென வாய் முணுமுணுக்கத் திரும்பிக்கொண்டிருந்தேன் அப்போது இரவு ஒன்பது மணியிருக்கும். காட்டு மிருகங்களின் சத்தமும் அந்த குன்றும் குளியும் நிறைந்த அடர்ந்த காட்டுப்பகுதியில் அங்குமிங்குமாய் தெரியும் கைவிளக்குகள் ஒளி மின்மினிப் பூச்சிகளாகத் தெரிவதையும் தவிர வேறெதுவுமில்லை.

அத்தகை விளக்குகளின் ஒளியைக் கொண்ட அப்பகுதியில் அமைந்த குடிசைகளைக் கணக்கெடுத்துவிட முடியும்.

சென்ற பாதையால் திரும்பிக்கொண்டிருந்தேன். என் கண்களுக் கெட்டியதூரத்தில் காட்டுத்தடிகளை வேலியாகக்கொண்ட ஒரு குடிசை முன்றலில் ஒரு சிங்களப் பெண் பானை சட்டிகமுவிக்கொண்டிருந்தாள். அவளருகே ஒரு கைவிளக்கும் ஒரு துண்டில் படுக்கவைக்கப்பட்டிருந்த குழந்தையும், அவள் தன்பாட்டுக்கு வேலை செய்து கொண்டிருந்தாள். அக்குழந்தையோ வனவிலங்குகளுடன் போட்டிகோட்டுக்கொண்டு கத்திக் கொண்டிருந்தது. அவள் அக்குழந்தையைத் தூக்குவதாய்க் காணோம்! குழந்தையும் ஓய்வதாய்க் காணோம். திடீரென அந்த சிங்களப்பெண் உரத்த குரலெடுத்து 'அனே! பற தெமிலவாகே மட்ட கறதர தெனவானே!' தான் பெற்ற குழந்தையைப்பார்த்துக் கத்தினாள். இது இடிபோல் என் காதுகளை வந்து தாக்கியது. அதிர்ச்சியடைந்து சில நிமிடங்கள் சிலையானேன்.

குழந்தையின் குரலைக்கேட்காதவர்கள் மட்டுமே யாழையும், குழலையும் இனியது என்பர் என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வள்ளுவனை விட்டுப் பேசச்சொன்னான் தமிழன். இங்கே! பத்துமாதம் தான் நொந்து சுமந்து பெற்றெடுத்த மழலை அழுவதைக் கேட்டு பறைத்தமிழன் தரும் கரைச்சல் போல் இக்குழந்தை தருகிறதேயெனக் கதுகிறளே இந்த சிங்களத்தாய். நான் அதிர்ச்சியடையாமல் இருக்க முடியுமா?

மனிதன் போகப்பாதையே கிடைக்காத இந்த சிங்களக்காட்டில் படிப்பறிவே நுளைந்திருக்க முடியாது. நிலைமையிப்படியிருக்க தன் பிள்ளை அழுவதைக்கூட பறைத்தமிழன் தரும் துன்பம் போல் என எப்படி இந்த சிங்களப்பெண் கத்தினாள்? என் சிந்தனை சுழன்றது.

இதிகாசகாலத்தில் பாட்டுடைத் தலைவனாய் வைத்துப்பாடப்பட வேண்டிய சிங்கள மன்னர்கள் பலர் இருக்கப்கூடியதாய், கால் நீட்டி படுக்க முடியவில்லை. ஒருபக்கம் தமிழன் நிற்கிறான். மறுபக்கம் கடல். எப்படி நீட்டி நிமிர்ந்து தூங்க முடியும்! எனக் கூறியதற்காக துட்டகைமுனு (இவன் பெயரிலே துட்டன்) என்பவனைக் பாட்டுடைத்தலைவனாக்கி மகாவம்சத்தை தீப்பந்தமாக்கி தமிழன் மேல் வீச தூக்கிக்கொடுத்தவன் சிங்களவன். மனித நாகரீகம், கல்வியறிவு எதுவுமே எட்டிவிட பாதை கிடைக்காமல் தவிக்கும் இந்த சிங்களக் காட்டில் மகாவம்சமும் துட்டகைமுனுவும் வர விரும்பினாற்கூட வந்திருக்க முடியாதே! அப்படி வந்தாலும் பார்க்க அறிவு, படிப்பு என்ற இரண்டு கண்களும் இல்லாத குருடியல்லவா இந்த சிங்களப்பெண். அப்படியாயினும், நிர்மலமான ஆற்று நீர் போல் இருக்க வேண்டிய இப்பெண்ணின் நெஞ்சை தமிழனுக்கெதிரான அசுரவெறியுணர்வு எப்படி குளித்

தொடர்ச்சி 22ம் பக்கம்...

-வாசகர் உலகம்-

வைகாசி 'இளைஞன்' பல தர மான விடயங்களை தாங்கி வந் தாலும், ஒரிரு செய்திகளையும், படங்களையும் பார்த்த நான் கவலை கொண்டேன். 'போகிற போக்கில்' என்ற தலைப்பில் ஏ.-ஜே.ஜி அவர்கள் எழுதிய 'நிர்வா ணக்கோலத்தில் விளம்பரத்திற்கு' பெண்ணின் நிர்வாணப்படத்தையே பிரசுரித்தது அவ்வளவு நன்றாக இல்லை. செய்தியை வெளியிட்டு இருக்கலாம். படத்தைப் போட்டி ருக்கத்தேவையில்லை. இது ஆசி ரியரின் தவறா? ஏ.ஜே.ஜி அவர் களின் தவறா? இப்படியான படங் களை வெளியிடாதீர்கள். இனி இளைஞனிலும் ஆபாசப்படங் களை பார்த்து ரசிக்கலாம் என சில இளைஞர்கள் கதைத்ததை நான் கேட்டேன். இது ஐரோப்பா எதை வேண்டுமானாலும் எழுத லாம் என்றால்... அது தவறு. நாம் தமிழர் எமக்கொன்றொரு கலாச்சாரம், பண்பாடு உண்டல் லவா? அதை நாம் மறக்கலாமா?

கடந்த இதழ்களில் 'சீதை பத்தி னியா?' என்ற கேள்வியைக்கேட்டு அந்தப்பத்தினித்தெய்வத்தையே இழிவு படுத்தினார் ஒர் எழுத்தா ளர். அதற்கு வேறு சில எழுத் தாளர்கள் தக்க பதில் கொடுத்து அது மெல்ல ஓய... இப்ப என் னடா என்றால் 'அர்த்தமற்ற இந் துமதம்' என்ற தலைப்பில் இரா.-மோகனராஜா அவர்கள் எதை எதையோவெல்லாம் எழுதுகிறார். இவருக்கு ரமேஷ் வவுனியன் அவர்கள் காரசாரமான பதிலடி கொடுத்ததையிட்டு மகிழ்ச்சியே. வைகாசி இதழில் தன் கற்பனை யில் எழுந்த கதைக்கு கை, கால், மூக்கு, கண் வைத்து ஓர் உண் மைச்சம்பவம் என்று முடித்துள் ளார். ஐரோப்பாவில் விஷநோய் போல் மதம் மா(ற்)றிக்கொண்டிருக் கும் சிலருக்கு, இரா. மோகன ராஜா அவர்கள் எழுதி வரும் தொடர் வாயில் அவல் போட்டுக் கொண்டிருக்கிறது.

முரண்பாடான விடயங்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் இளைஞனே! உனக்கு என் வாழ்த் துக்கள். அதே நேரத்தில் 'சீதை பத்தினியா?', 'அர்த்தமற்ற இந்து மதம்' போன்ற தலைப்புகளில் அர்த்தமற்ற விடயங்களை எழுதி வரும் எழுத்தாளர்களுக்கு நீ களம் அமைத்துக் கொடுக்கலாமா?

ரமேஷ் வவுனியன் எழுதியது போல் நான் மதவாதியல்ல. ஓர் விமர்சகன் அவ்வளவுதான். இளைஞனே உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

-ப. கிருபாகரன், முன்ஸ்ரர்-

அர்த்தமற்ற இந்துமதம் அர்த்தமற் றதாகவே தோன்றுகின்றது. யாரோ ஒரு புரோகிதர் அல்லது ஒரு சிலர் விடும் தவறுகளை வைத்து அர்த்தமற்ற இந்துமதம் என்ற தலைப்பு சரியா?

கடந்த இதழில் 'அர்த்தமற்ற இந்துமதம்' என்ற இரா.-மோகனராஜாவின் தொட ருக்கு, ரமேஷ் வவுனியன் அவர்கள் விமர்சனம் எழுதி யிருந்தார். அதற்கு இந்த இதழில் பதில் தருகிறார் கட் டுரையாளர்.

'இளைஞன்' — வாசகர்களின் கருத்து தோதல்களுக்கு களம் அமைத்துத் தருவான்!

ஒன்பது புள்ளப் பெத்தவளுக்கு ஒரு புள்ளப் பெத்தவள் முக்கிக் காட்டினாளாம். தேடல்கள் தேடி முத்துக்கள் பல பெற்றெடுத்திருப் பதனால், வவுனியனை நான் ஒன் பது பிள்ளை பெற்றவளாகவே கருதுகிறேன். என்னைத்தான் ஒரு பிள்ளைப்பெற்றவள் என்கிறேன். கிணற்றுக்குள் (தவளை) இருந்து பார்ப்பது ஒரு கோணம். தரையில் இருந்து பார்ப்பது ஒரு கோணம். மலையில் இருந்து பார்ப்பது இன் னொரு கோணம். நீங்கள் எங்கே யிருந்து எந்தக்கோணத்தில் தஸ் லிமா நஸ்ரீனைப் பார்த்தீர்கள். தஸ்லிமா உலகத்திற்குத் தன்னை விளம்பரப் படுத்துவதற்காகவே முஸ்லிம் மதத்தைப்பற்றி இசகு பிசகாக எழுதினார் என்று அவ ருடைய நூலுக்கு குறுகிய வட்டம் போட்டு விட்டீர்கள். (வட்டம் என் றால் கிணறு என்று அர்த்தப்பட வேண்டாம்) அந்த நூலைப்படித்து முடித்துவிட்டுத்தான் இப்படியொரு கருத்தைச்சொன்னீர்களா? அல்லது ஈரானிய எழுத்தாளர் 'சல்மான் ருஸ்டி'யின் நூல்?

தலைப்பிலே தப்பு தமிழனுக்கே அழகில்லை!

புத்தமதத்தில் உள்ள சிங்களவர் கள் (பிக்குகள்) இன்று செய்யும் இனப்படுகொலைகள் -இவற்றை யாராவது புத்தி கெட்ட புத்த மதம் என தலைப்பு கொடுத்தார்களா? பாவத்தை செய்துவிட்டு வருப வர்க்கே பாவமன்னிப்பு கொடுக் கிறாரே கிறிஸ்தவ பாதர் -பாவப் பட்ட கிறிஸ்தவ மதம் என தலைப்புண்டா?

உலகமெங்கும் சத்தியம் போற்றப் படுகின்றது. சத்தி யத்தை மீறுபவர்கள் இல்லையா! சத்தியம் சாய்ந்து விட்டதாக தலைப்பு உண்டா?

அரச வல்லுனர்களால் சட்டம் இயற்றப்படுகிறது. சட்டவிரோத மாக செயல் படுபவர்கள் இல் லையா! அதனால் சட்ட விரோத மான சட்டத்தையும் சட்டவல்லு னர்கள் தான் இயற்றினார்களென கொள்ள முடியுமா?

ஒரு சிலரின் குறையை கூற மோகனராஜாவுக்கு இந்த தலைப் புத்தான் சரியாகப்பட்டதோ?

காதலுக்கு உகந்த மொழி இத் தாலி என்றால், வியாபாரத்திற்கு உகந்த மொழி ஆங்கிலமென்றால், தத்துவத்திற்கு சிறந்த மொழி ஜேர் மன் என்றால், பக்திக்குச் சிறந்த மொழி தமிழ் மொழி: நன்பனே!

இந்துமதத்தின் தத்துவத்தை அறிவது இலகுவான காரிய மில்லை. காலம், நேரங்களையும், பணத்தையும் செலவு செய்தால் முழு தத்துவத்தையும் அறியாவிட் டாலும் எந்த கேள்விக்கும் சரி யான பதிலை அறியலாம்! கவிஞ ரின் (கண்ணதாசன்) வாசகத்தைத் தான் இப்படி மாற்றினீர்கள். இன் னும் எத்தனையோ புண்ணியவான் கள் உண்டு தப்பினார்களே மோகனராஜாவின் பார்வையிலி ருந்து போதும் இந்த ஜென்மத் திற்கு!

-ராஜா சிவகுமார், DUEREN-

'ஐடியா ஐயாசாமி' அருமையான நகைச்சுவைப்பாணி. அறுத்தாலும் ஐயா அவ்வளவும் விசயம். ஆனால், ஒன்று கண்டியலோ, வந் தியலோ, போனியலோ எந்த இடத்துத் தமிழோ தெரியவில்லை! அல்லது இளைஞனின் அச்சுக் கோர்ப்பாளர் பிழையோ. ஐயா சாமி கவனத்தில் எடுக்கவும். வளரட்டும் உங்கள் ஐடியா!

-அர்ச்சுனன், ஜேர்மனி-

பருவமடையாத சிறுமி பிள்ளை வரம் கேட்டுப் பிரார்த்திக்கலாமா?

தஸ்லிமா நஸ்ரீன்.

முதலிரவு முடிந்தவுடனேயே பிறக் கப்போகும் குழந்தைக்குப் பெயர் வைத்து விடுவீர்களா? என்று கேட் டிருந்தீர்கள். எனக்கு இன்னமும் திருமணமாகவில்லை. இருந்தும் பிறக்கப்போகும் குழந்தைக்குப் பெயர் வைத்துவிட்டேன். இதற் காக முதலிரவு வரும்வரை காத் திருக்கத் தேவையில்லை. ஏனேன் றால், என் ஆண்மையில் எனக்கு நம்பிக்கையுண்டு.

மழைக்குப் பிரார்த்திக் குடை யோடுதான் போகவேண்டுமாயின், நான் சந்திரமண்டலத்துக்குப்போக வேண்டுகின்றேன். என்று மிகவும் சாதரணமாகச் சொல்லிவிட்டார் முரதூர். பழ. தியான். ஏன் சொல் வதற்கு இன்னும் நிறைய இருக்கி றதே. நான் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையை விலைக்கு வாங்க வேண்டுகின்றேன். உறங் காமல் உண்ணாமல் வாழ வேண் டுகின்றேன். இறக்காமல் பெண் ணாக மாற வேண்டுகின்றேன். இப்படி எத்தனையோ அசாத்திய மான ஆசைகளை எண்ணிக்கொ ண்டு நம்பிக்கையின் மீது பழி சுமத்தலாமா? பருவமடையாத சிறுமி பிள்ளைவரம் கேட்டுப்பி ரார்த்திப்பது போலல்லவா இருக் கிறது, காளை மாட்டை வாங்கி வைத்துக்கொண்டு அதில்ப்பால் கறக்க எண்ணலாமா? இறைவன் என்னை இறக்கவிடமாட்டான் என்ற (மனோநிலை) நம்பிக்கை யில் மலையில் இருந்து மண்ணை நோக்கி ஒருவன் குதிப்பானேயா னால், அவன்தான் உண்மையான, தூய்மையான நம்பிக்கையாளன். அவனே முற்றுமுழுதாய்க் கட வுளை நம்புகின்றான்.

நீங்கள் இருவரும் தலைப்பையே தவறு என்று சுட்டிக்காட்டினீர்கள். தலைப்புக்கும் உட்கருவுக்கும் சம் பந்தம் இருந்துதான் ஆகவேண் டுமா என்ன?

'பாடு நிலாவே' என்று ஒரு சினி மாப்படத்திற்கு தலைப்பு வைத் தால், நிலவு இறங்கி வந்து பாட் டுப்பாட வேண்டும் என்று அடம் பிடிப்பீர்கள் போலிருக்கிறது. தலைப்பை விட்டுவிட்டு கட்டுரை யில் நியாயங்களைக்கேட்டிருக்கி றேன். அதற்கு ஒரு பதிலை எழு துங்கள். நானும் அறிந்து கொள் கிறேன். மற்றவர்களும் அறிந்து கொள்ளட்டும்.

போலீஸ்காரனின் பிள்ளை திரு டனாவதில்லையா? வைத்தியனின் பிள்ளை நோயாளியாவதில்லையா? ஒரு தகப்பனுக்கும் மகனுக்கும் முர ண்பாடு இருக்கும்போது, கட்டு ரைக்கும் தலைப்புக்கும் முரண்பாடு இருக்கக்கூடாதோ?

தங்கள் தரமானதா இல்லையா என்று கந்தகக் கல்லால் உரசிப் பார்ப்பார்கள். மாறாக இங்கே கல் லுத்தரமானதா இல்லையா என்று இரண்டு தங்கங்கள் கல்லை (என்னை) உரசிப்பார்த்திருக்கின் றன. போகிற போக்கில் கல்லும் தங்கமாகிவிடும் போலிருக்கிறது!

-இரா. மோகனராஜா-

'பாடு நிலாவே' என்று ஒரு சினிமாப் படத்திற்குத் தலைப்பு வைத்தால், நிலவு இறங்கி வந்து பாட்டுப் பாட வேண்டும் என்று அடம் பிடிக்கலாமா?

இறைவன் என்னை இறக்க விடமாட்டான் என்ற நம்பிக்கையில் மலையில் இருந்து மண்ணை நோக்கி ஒருவன் குதிப்பானேயானால் அவன் தான் உண்மையான, தூய்மையான நம்பிக்கையாளன். அவனே முற்று முழுதாய்க் கடவுளை நம்புகின்றான்!

வாழ்க கலைஞர் கருணாநிதி வளர்க தமிழ் மக்கள்

தமிழ்நாட்டில் மீண்டும் நல்லாட்சி திரும்பியுள்ளது. உலகத்தமிழர்கள் அனைவருக்கும் குறிப்பாக இலங்கையைத் தமது பாரம்பரிய நாடாகக்கொண்டு தங்களுக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தங்களால் பிரிந்து வாழ்வதே மேலெனக் கருதும் தமிழீழ மக்களுக்கும், குடியுரிமை அற்ற இந்திய வம்சாவழி மலையக மக்களுக்கும், வெளிநாடுகளில் அகதிகளாய் வாழ்ந்து அல்லறும் தமிழர்களுக்கும் இந்நல்லாட்சி ஒரு விடிவைத்தரு மென நம்புகின்றோம். ஏனெனில், உதயசூரியனான கலைஞர் Dr. மு. கருணாநிதி அவர்கள் தமிழ்த்தானைத்தளபதியாக, தமிழ் நாட்டு மன்னனாக, மாநில முதல்வராக, மீண்டும் பெரும்பான்மைப்பலத்துடன் தெரிவு செய்யப்பட்டு, அரியாசணையில் அமர்த்தப்பட்டுள்ளதே காரணம் ஆகும்.

இந்த உதயசூரியரான மாண்புமிகு கலைஞர் அவர்கள் மக்களுக்கு விடுத்த முதல் உரையில், இவ்வெற்றி தனக்கோ, தனது கட்சிக்கு மட்டும் ஏற்பட்ட வெற்றியல்ல என்றும், அது உலகம் வாழ் அனைத்து தமிழர்களுக்குமான பெரும் வெற்றி என்றும், அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் துயர் துடைக்க, தமிழ்நாட்டில் அரசியல் தூய்மையை ஏற்படுத்த, இவ்வெற்றி வாய்ப்பளித்து உள்ளது என்ற பொருள்பட கூறினார். இதை கேட்டும், அறிந்தும் தமிழர்களாகிய எல்லோரும் உவகைக்கடலில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமே இல்லை.

ஆகவே, இவரின் வெற்றிக்காகவும், அவ்வெற்றிவாகையுடன் வேறுபல மணித்துகள்கள் அடங்கிய கருத்தாழமிக்க, உள்ளத்திற்கு உவகையும், நம்பிக்கையும் அளித்த அவரின் பேருரைக்காகவும் "இளைஞன்" சார்பிலும் உலகளாவிய அனைத்துத் தமிழர்கள் சார்பிலும் நாம் நன்றியையும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

எல்லாம் அறிந்தவராயினும் இப்பெரியாருக்கு ஒரு சில வற்றை கூறிவைக்க ஆசைப்படுகின்றோம். அண்மையில் மலையகத்தமிழர்களின் தலைவரும், அவர்களின் உரிமைகளுக்காக தமது மந்திரி பதவியையே துச்சமெனக்கருதும் பெருந்தலைவர் திரு. செள. தொண்டமான் அவர்களும் முதல்வர் கலைஞர் அவர்களும் அண்மையில் சந்தித்து சில நிமிடங்கள் பேசியது முக்கியம் வாய்ந்ததொன்றாகும். புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர் தமது வாழ்த்துச்செய்தியில், "இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கெதுரான இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தாங்களும் தங்கள் கட்சியினரும், கூட்டணிக்கட்சிகளும் ஆணித்தரமாக முன்வருவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்" எனக் கூறியுள்ளார்.

இந்தியா தேர்தலுக்கான பணிகளில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பார்த்த "றி விறேச" — "சூரியவெளிச்சம்" என்ற தாக்குதலை இரண்டாவது முறையாக அப்பாவித்தமிழர்கள் மேல் 19 -04 -96 இல் இலங்கை அரசால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. வெகு அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற லெப். ஜெனரல் ஜெரிடிசில்வா கூறிய தகவல்களும், ஆலோசணைகளும் தீவிர கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியனவாகும். இலங்கை அரசிற்கு இம்மாதம் ஊர்காவற்படையினருக்கான, மக்களுக்கு ஆபத்தைக்கொடுக்கக்கூடிய பயிற்சிகளை அமெரிக்க அரசு ஆரம்பிக்கவுள்ளது. இஸ்ரேலின் ரோந்துப்படையினர் தொலைவில் குறிபார்க்கும் நவீன சாதனங்கள் போன்றனவற்றை 1994 இல் அளித்து உதவியது போல் இம்முறையும் விரைவில் உதவி புரிவதென இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாம். அதுபோல பிரிட்டனும் நவீன போர்க்கருவிகளையும், தொடர்பு சாதனங்களையும் தந்து தீவிர பயிற்சியும் அளிக்கவுள்ளதாம். மேலும் தேவைப்படும் பயிற்சி, இருட்டிலும் காட்டிலும் போராளிகளை கண்டுகொள்வது என்ற உத்திகள் மட்டுமே தீவிரமாக்கப்படவேண்டுமாம். யாழ்ப்பாணத்தில் புலிகள் தோல்வியடைந்தாலும் இது பற்றி இலங்கை அரசு திருப்தியடைக்கூடாது என்பதுதான் அவரின் கூற்றாகும்.

இதேவேளை இங்கிலாந்தில் புலிகள் தலைமையகத்தை வைத்தியக்கும் லோறன்ஸ், இலங்கையின் சமாதானத்திற்கு பன்னாட்டு ஆதரவைக்கோரிக்கொண்டு இருப்பதில் மட்டும் திருப்தி காண முடியாது. செயலில் இறங்க வேண்டும். பயன் தரக்கூடிய ஆர்ப்பாட்டங்களை இங்கிலாந்திலேயே மும்முரமாக ஆரம்பித்து இலங்கைக்கு அந்நாடு வழங்கும் உதவிகள் யாவற்றையும் குறிப்பாக அப்பாவிகளாக அங்கும் இங்கும் அலைந்து திரியும் தமிழர்களுக்கு மேலும் ஆபத்துக்களைத் தரக்கூடிய எந்த உதவிகளையும் கிடைக்காதவாறு செயல்படுத்துவதே முதற்பணியாக இருக்க வேண்டும்.

அரசியலில் பழுத்த ஞானியாகவும், அனைத்து தமிழ்த் தானைத் தளபதியாகவும், கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற முக்கூட்டு முதல்வராகவும், அண்மையில் நடந்தேறிய மத்திய மாநில அரசுகளின் தேர்வுக்கான உன்னத உத்திகளை, காமராஜர் போன்ற பண்புகளமைந்த திரு. மூப்பானாரின் உதவியுடனும், அனுசரணையுடனும் தமிழர்களுக்கு (அவர்கள் எங்கிருந்தாலும்)

தொடர்ச்சி 19 ம் பக்கம்...

இது தேவையா?

இரண்டை இலைச் சின்னத்தை
சத்தியமாய் காட்டியே
எம். ஜி. ஆர் ஆட்சிப்பீடம்
ஏறிய அரிதார அம்மணி
தமிழக மக்களை
தரக்குறையாய் எண்ணியே
ஊழல் என்னும் அரக்கனை
உலவ விட்டு ஊரை
கொள்ளை கொண்டீரே
தமிழ் மக்கள் தலை மொட்டை
போட்ட உங்களுக்கு
மக்கல்ல தமிழ்க்குடி
மக்களேதான் எம்குடி
என்று போட்ட மொட்டை நாமம்
சரியான தீர்ப்பு இது!
உங்களுக்கு இது தேவையா?

-கற்கி, பிராங்பேர்ட்-

உலகில் தமிழர்கள்

தமிழாலய ஆண்டுவிழா

உலகத்தமிழ் இயக்கம் ஜேர்மன் நாடு முழுவதும் இது வரை 98 தமிழாலயங்களை அமைத்துக் கல்விப்பணி செய்து வருகின்றது. கடந்த மாதம் பிராங்பேர்ட்டில் அமைக்கப்பட்ட தமிழாலயம் தனது முதலாவது ஆண்டு விழாவை வெகுவிமர்சையாகக் கொண்டாடியது. ஈழத்திலே இனப்படுகொலையுண்ட தமிழ் மக்களுக்காகவும், தாயக மீட்புப்போரிலே விதையாக வீழ்ந்துவிட்ட மாவீரர்கட்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மாநிலப் பிரதிநிதி திரு. கனகலிங்கம் மங்கள விளக்கேற்றி நிகழ்சிகளை ஆரம்பித்து வைத்தார்.
விழாவிற்கு பிராங்பேர்ட் பாலர் பாடசாலை அதிபர் திரு. லொற்ஸ் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார். பாடசாலை மாணவர்கள் சுவிற்சலாந்து தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் பாசல் கிளையினரால் முத்தமிழ் விழா ஒன்று கடந்த மாதம் நடாத்தப்பட்டது.
எம் தாயகத்தில் நிகழ்ந்தேறும் துன்பங்களுக்கு ஓர் முடிவான முடிவை நாடியும், விடுதலைக்காய் உயிர் நீத்த எம் போராளிகள், பொதுமக்களுக்கும் என இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து, திரு. திருமதி வினாசித்தம்பி தில்லையம்பலம் அவர்கள் மங்கள விளக்கினை ஏற்றி வைக்க விழா இனிதே ஆரம்பமாகியது.
700 க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பிக்க, சங்கமம் இசைக் குழுவினர் போர்க்கால ராகங்கள் பாடல்களை வழங்கி சபையோரை மகிழ்வித்தனர்.

பாசல் கலா நிகேதனா நாட்டிய பாடசாலை மாணவிகளும், பாரதி கல்வி நிலைய மாணவி முகமட் அஜித்தாவும் சிறப்பான முறையில் நாட்டிய நிகழ்ச்

தொடர்ச்சி 19 ம் பக்கம்...



பாடிய தமிழாலய கீதத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம் பமாகின.

தமிழாலய கீதம் பாடும் மாணவர்கள், உலகத்தமிழர் இயக்க ஜேர்மன் பொறுப்பாளர் திரு. காங்கேயமூர்த்தி உரையாற்றுவதையும், "நம்நாடு" நாடகத்தில் பங்குகொண்ட மாணவர்களையுமே படத்தில் காண்கிறீர்கள்.

பாசல் முத்தமிழ் விழா

மாறுவேடப்போட்டியில் கலந்து கொண்ட சிறுவர்களையும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையுமே படத்தில் காண்கிறீர்கள்.

அடிக்கடி என் மனைவி என்னுடன் சண்டைக்கு வருகிறாள். என்ன செய்வது?

-சண்முகநாதன், ஜேர்மனி-

இப்படித்தான் ஒரு குடும்பத்தில் கணவன்-மனைவிக்கிடையில் வந்த சண்டை உச்சக்கட்டத்திற்கு போய், இருவரும் ஒருவரோடு ஒருவர் முகம் கொடுத்துப் பேசாமல் காகிதத்தில் எழுதி எழுதியே செய்திகளைப் பரிமாறிக்கொள்வார்கள்.

அவள் "சாப்பாடு தயார்" என்று எழுதிக்காட்டினால், இவன் "சாப்பிட வருகிறேன்" என்று எழுதிக்காட்டுவான்.

"நான் மாலையில் கொஞ்சம் தாமதமாக வருவேன்" என்று இவன் எழுதிக்காட்டினால், "சரி பரவாயில்லை" என்று அவள் எழுதிக்காட்டுவாள்.

ஒரு நாள் காலை ஐந்து மணிக்கு அவன் பிரான்சுக்குப் போகும் ரயிலைப் பிடிக்க வேண்டும். "நாலு மணிக்கு என்னை எழுப்பி விடவும்" என்று எழுதி மேசையில் வைத்துவிட்டு தூங்கி விட்டான். காலையில் அவன் எழுந்திருக்கும் போது மணி ஆறு. "என்னை ஏன் எழுப்பவில்லை?" என்று மனைவியுடன் கத்தினான். "சும்மா கத்தாதீர்கள். நாலு மணி ஆகிவிட்டது, எழுந்திருக்கவும். என்று எழுதி உங்கள் படுக்கையில் வைத்திருக்கிறேன், பார்க்கவில்லையா?" என்றாள் அவள்!

இதைப்படித்த பின்பு நீங்கள் சண்டையை வளர்த்துக் கொள்ள மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன்.

சிலர் தமிழர்களாக இருந்து கொண்டு தங்களுடைய தமிழ்மொழியை கதைப்பதற்கு வெக்கப்பட்டு ஆங்கிலத்தில் கதைப்பதை பெருமையாக நினைக்கிறார்கள். அவர்கள் பற்றி...?

-இ. உதயமூர்த்தி, லிச்-

ஐரோப்பாவில் வாழ்ந்து வரும் ஒருவர், புதிதாக ஈழத்திலிருந்து வந்த தன் மனைவியை முதன்முதலாக ஒரு நட்சத்திர உணவு விடுதிக்கு அழைத்துப் போனார்.

தனக்கு ஆங்கிலம் தெரியும் என்பது போல தன் புதிய மனைவிக்கு காட்டிக் கொள்ள ஆசைப்பட்ட அவர், "மெனு" கார்ட்டைக் காட்டி முதலில் குடிப்பதற்கு ஏதாவது "ஜூஸ்" கொண்டு வரச்சொன்னார். சர்வர் கொண்டு வந்து வைத்தார்.

நன்கு ஆங்கிலம் தெரிந்த மனைவி, கணவனின் ஆங்கில அறிவை எண்ணி நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது.

மீண்டும் மெனு கார்ட்டை எடுத்து, கடைசியில் இருந்த ஒரு அயிட்டத்தைக் கொண்டு வரச்சொன்னார்.

தலையைச் சொரிந்த சர்வர் "இதைக் கொண்டுவர முடியாது. நீங்கள் சாப்பிடவும் முடியாது" என்றார்.

"ஏன்?"

"அது இந்த ஓட்டல் முதலாளியம்மாவின் பெயர். மெனு கார்ட்டின் அடியில் எழுதப் பட்டிருக்கிறது."

ஆங்கிலத்திலும் ஒழுங்காகவா கதைக்கிறார்கள்? இப்படி அரைகுறையாக கதைத்து அவமானத்தையல்லவா தேடிக்கொள்கிறார்கள்.

எடுக்கும் சம்பளத்தை வட்டிக்கும், வங்கிக்கும் என வருமானத்தோடு செலவு செய்திட்டு மற்றவர் பணத்திலே காலம் ஓட்டுபவர்களை என்ன செய்யலாம்?

-ஜெயா, சியோன்- சுவிஸ்-

ஒன்றும் செய்ய முடியாது. ஏனேனில்.....

ஒருவருடைய தென்னந் தோப்பில் தேங்காய் திருட ஒருவன் மரத்தில் ஏறிக்கொண்டிருந்தான். தற்செயலாய் அங்கு வந்த, தோப்புக்காரரைப் பார்த்ததும் இறங்கத் தொடங்கினான்.

"ஏன் தென்னை மரத்தில் ஏறினாய்?"

"மாட்டுக்குப் புல் பிடுங்கப் போனேன்."

"தென்னை மரத்தில் ஏது புல்?"

"புல் இல்லை அதனால் தான் இறங்கி விட்டேன்."

இப்படிப் பட்ட மிகவும் சாமர்த்தியமான திருடர்கள் இவர்கள்.

ஜாக்கிரதை! ஜெயா.

ஊரில் வாழ்ந்த வாழ்வை மறந்திட்டு, வெளிநாடு வந்ததும், குபேரன் வீட்டு பிள்ளைகளாய் வாழ பலர் முயற்சித்து, கடன்காரர்களாய் உலா வருகிறார்களே... இவர்கள் திருந்தும்படி சில அறிவுரை சொல்லுங்களேன்?

-கீதாச்சந்திரன், பாசல்-சுவிஸ்-

ஒரு ஆற்றுக்குள் ஒருவன் தவறி விழுந்துவிட்டால், அவன் துரதிஷ்டக்காரன். அவன் எப்படியோ தப்பித்து கரை சேர்ந்துவிட்டால், அவன் அதிர்ஷ்டசாலி. அப்படிக் கரையேறும் போது கையில் ஒரு மீனோடு வந்தால் அவன் புத்திசாலி.

நமது நாட்டுப்பிரச்சனையால் தெரிந்தோ-தெரியாமலோ "வெளிநாடு" என்ற ஆற்றுக்குள் வந்து விழுந்துவிட்டோம்.

விழுந்ததுதான் விழுந்தோம், எழும் போதாவது அறிவியல் துறையில் வளர்ந்த ஐரோப்பாவில், ஏதாவது ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து படித்து மலரும் ஈழத்தில் அறிவாளிகளாக போய் இறங்கக்கூடாதா?

உதுகளுக்கு நீங்களோ, நானோ அறிவுரை சொல்லித் திருத்த முடியாது சந்திரன். விட்டிடுங்க உதுகளை.

தங்கள் பத்திரிகைச் செய்திகளிலும், தங்கள் பதில்களிலும், மெல்ல மெல்ல ஆபாசம் தலை தூக்கி றதே...?

-ப. சிவகுமாரன், ஜேர்மனி-

தங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்.

ஒரு பெண் தன் மார்பகச் சேலையை விலக்குகிறாள். இதை ஆபாசம் என்று சொல்லுவீர்களா?

பாலுணர்ச்சிக்காக விலக்கிய சேலையா? இல்லை, பாலூட்டுவதற்காக விலக்கிய சேலையா? என்ற நோக்கம் அல்லவா அதை தீர்மானிக்க வேண்டும்.

ரஷ்சியாவில் ஒரு ஓவியக்கூ

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

'கலைகளிலே ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கிறான்'

வருடம் - 03 குழந்தை - 25 ஆனி - 1996

தமிழர்களாக இருந்து கொண்டு தமிழில் கதைக்க வெட்கப் படுபவர்கள் பற்றி...?

சங்கரி

...தொடர் நவீனம்... (12)

-----குஞ்சம்மா-----

பொறுமையின் இலக்கணம் பெண்கள் என்பார்கள், ஆனால் சங்கரியிடம் இருந்த அந்தப் பொறுமையின் எல்லையையும் தாண்ட வைத்து விட்டான் கண்ணன்.

இனிமேலும் இந்த நரக வாழ்க்கை வாழ்றதில பிரியோசனம் இல்லே. கடைசியில பிள்ளைகளின்ர எதிர் காலந்தான் வீணுகிப் போயிடும்.

கண்ணனுக்குப் பிடிச்சிருக்கிற இந்தச் சந்தேக நோயை மாத்திறதுக்கு சங்கரி எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்து விட்டாள். இதுக்கு மேல இனித் தாங்க முடியாததாலதான் விவாகரத்து வாங்கிக் கொண்டு பிரிஞ்சு போய் வாழ முடிவெடுத்து விட்டாள்.

அன்றைய இரவு சங்கரிக்குச் சிவராத்திரிதான். கண்ணன் சாப்பிடவும் இல்லே. சங்கரி சாப்பிடச் சொல்லிக் கேட்கவும் இல்லே, போய்ப் படுத்து விட்டான். பிள்ளைகளுக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு அவளும் சாப்பிடாமல் போய்ப் படுத்தாள்.

காலையில் இதுக்கெல்லாம் ஒரு முடிவு எடுக்க வேணும். ஆனால் இந்தப் பிள்ளைகள் மூண்டையும் எப்பிடி வளர்த்தெடுக்கிறது? வேற வேலே தேடி எடுக்க வேணும். வேற வீடு தேட வேணும். யோசிக்க யோசிக்க தலேதான் வலித்தது.

இந்த 11 வருஷத்தில சங்கீரி எப்பிடி எப்பிடி எல்லாமோ கஸ்ரப்பட்டிருக்கிருள். இனியாவது இதுக்கொரு நல்ல முடிவுகாலம் வரட்டும்.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தவள், விடியும் போதுதான் தூங்கிப் போனுள். பிள்ளைகளின் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழும்பி நேரத்தைப் பார்த்தாள் 7மணி. கண்ணன் வேலேக்குப் போய்விட்டிருந்தான். விறு விறு என்று எழும்பி பிள்ளைகளுக்குச் சாப்பாடு செய்து கொடுத்து பள்ளிக்கு அனுப்பி விட்டு, ஏஞ்சலாவையும் கொண்டு போய் கிண்டர் கார்டனில் விட்டு விட்டு வந்து சோபாவில் இருந்தாள்.

அவளாள் நேற்று நடந்ததை கிரகிக்க முடியவில்லே. கண்ணனே எதிர்த்து இவ்வளவு தூரம் கதைப்பதற்கு எப்படி எங்க இருந்து இவ்வளவு தைரியம் வந்தது? சுதா இருக்கிற தைரியமா? சுதா ஆரு? காலம் பூரா எனக்குத் துணேயா இருப்பாரா? என்ர மனம் சுதா மேல் ஈடுபாடு கொண்டு விட்டதா? அதனலேதான் கண்ணனேடை துணிஞ்சு சண்டை போடுறனு?

கண்ணனுக்கு எப்பவுமே சந்தேகந்தான். இண்டைக்கு நேற்று வந்ததில்லே இந்தச் சந்தேக வியாதி அவனுக்கு. ஆனால் இப்பல்லாம் சுதாவக் காணுற போது என்னே அறியாமலேயே எனக்குள்ள ஒரு வித சந்தோஷம் ஏற்படுதே. அது ஏன்?

அப்ப கண்ணன் சந்தேகப் படுகிறது உண்மையா? இருக்காது. சந்தோஷத்தைத் தொலேச்சுப் போட்டு ஆறுதல் தேடிக்கொண்டிருந்த போது அதைப் புரிஞ்சு கொண்டு அன்பா ஆறுதலா இருந்தவர் சுதா.

அதனலதான் அவரைக் காணுற போது எல்லாம் மனசுக்குள்ள சந்தோஷமா இருக்கு. சுதா எவ்வளவு நல்லவர். இப்ப எவ்வளவு காலமா சுதாவோட பழகிறன், ஒரு நாளாவது தப்பான கண்ணேட்டத்தோட என்னேப் பாத்திருப்பாரா? எத்தனேயோ சந்தர்ப்பம் இருந்தும் ஒருநாள் கூட என்னே அவர் தொடேல்ல. அப்பிடிப் பட்டவரோட சேர்த்து கண்ணன் இப்பிடி எல்லாம் கதைச்சுப் போட்டாரே.

சங்கரிக்கு உள்ளம் குமைந்தது. வேலேக்குப் போகப் பிடிக்கேல்ல. ரெலிபோனில் சுகமில்லே, டொக்டரிடம் போய் மெடிக்கல் லீவு எடுத்து அனுப்புறன் என்று ஹோட்டலுக்கு அடிச்சுச் சொல்லிப் போட்டு திரும்பப் போய் படுக்கையில் விழுந்தாள்.

இனி என்ன செய்யிறது என்று திரும்பத் திரும்ப ஜோசித்துப் பார்த்தாள். விவாகரத்து வாங்கிப் போட்டு தனிய எப்பிடி வாழுறது? தனிய எண்டாப் பறவாயில்லே சிலோனுக்கே திரும்பப் போய் அம்மா அப்பாவோட இருந்திடலாம். இப்ப பிள்ளேகளோட என்ன செய்யிறது. அதுகளின்ர படிப்பும், அதுகளின்ர ஜேர்மன் வாழ்க்கையும், இனி இதுகளே அங்கயும் கூட்டிக் கொண்டு போக ஏலாது.

கண்ணன் இனி என்ன முடிவு எடுக்கப் போறனே தெரியாது. எதுக்கும் இண்டைக்கு கதைச்சு ஒரு முடிவு எடுக்க வேணும் எண்டு தீர்மானிச்சுக் கொண்டு படுத்திருந்தாள்.

ரெலிபோன் அடித்தது. வேலேக்கு ஏன் வரேல்ல எண்டு கண்ணன் அடிக்கலாம். இல்லாட்டி தன்னேக் காணேல்ல எண்டு சுதாவும் அடிக்கலாம். எடுக்கவா வேண்டாமா எண்டு ஜோசிச்சுப் போட்டு கடைசியில எடுத்து ஹெல்லோ என்றுள்.

சுதாதான் எடுத்தான். "என்ன சங்கரி ஏன் வேலேக்கு வரேல்ல? பிரச்சனேயே?"

சுதாவோட குரலக்கேட்ட உடன சங்கரி அழத்தொடங்கி விட்டாள். கொஞ்ச நேரம் அழட்டும் எண்டு பாத்துக் கொண்டிருந்து போட்டு "என்ன நடந்தது எண்டு சொல்லுங்கோவன் சங்கரி." என்றன்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு நேற்று நடந்தது எல்லாத்தையும் ஒன்று விடாமல் சொல்லிப் போட்டு, இனி என்ன செய்யலாம் என்று கேட்டாள் சங்கரி.

தொடரும்...

மக்களை மதிக்க கருணாநிதி அறிவுரை



மக்களை மதிக்க வேண்டும் என்று எம்எல்ஏ.க்களையும் எம்.பி.க்களையும் தமிழக முதல்வர் கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

சென்னை மெரீனா கடற்கரையில் நடந்த தேர்தல் வெற்றி-நன்றி அறிவிப்புப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் மேற்கண்ட அறிவுரையை வழங்கினார். அவர் பேசியதாவது:

சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன். வாக்குக் கேட்கச் சென்றபோது எத்தனை முறை கை எடுத்துக் கும்பிட்டோம். காலடிகளில் விழுந்து வாக்குகளைக் கேட்டோம். மக்களின் குழந்தைகளை வாங்கி முத்தமிட்டுப்

தொடர்ச்சி 22 ம் பக்கம்...

வாழ்க...

விடிவெள்ளியாக விளங்கிய, விளங்க இருக்கும் ஐயா கருணாநிதி என்ற பெயருக்கு அமைந்த அன்புப் பொக்கிஷத்திற்கு கீழ்க்கண்ட வேண்டுதல்களைப் பணிவன்புடன் கூறிவைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

1. சென்ற ஐந்து ஆண்டுகளாக யாருமற்ற அநாதிகளாக ஆக்கி தமிழ்நாடு வாழ் இலங்கைத்தமிழர்களுக்கும் கல்வி, வேலைகள், அரசு உதவிகள், முகாம்களின் சுகாதார வசதி போன்றவற்றைச் சீர்திருத்தி உங்கள் ஆட்சிக்காலங்களில் இருந்தது போல எல்லா வசதிகளையும், சலுகைகளையும் மறுபடியும் செய்து கொடுக்க வேண்டும்.

2. கொழும்புப்பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் படும் இன்னல்கள் சொல்லுக்கடங்கா. அத்துடன் தமிழ்ப்பகுதியில் காடுகளிலும், மேடுகளிலும், களனிகளிலும் உணவின்றி வாழும் தமிழ் அகதிகள் சொல்லொணாத் துயரத்தில் உள்ளனர். இவர்கள் தமது தாய் நாடான இந்தியா வரமுடியாதவாறு கடற்படைகள் மட்டுமல்ல, மத்திய அரசும் விசாக்கள் கொடுப்பதில்லை. ஆகவே இவர்களின் ஆபத்து நிலவரங்களை அறிந்து இந்தியாவுக்கு குறிப்பாகத் தமிழ்நாட்டுக்குத் தஞ்சம் புக ஆவண செய்யுங்கள்.

3. மத்திய அரசின் கொள்கையில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த, உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட ஈழத்தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய ஒரு முடிவை இறுதியானதாகவும் நிரந்தரமாகவும் விரைவில் ஏற்படுத்த, உங்கள் கூட்டணி அரசுகளால் முடியும். குறிப்பாக திராவிட மாநிலங்களும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசமும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்கும் வாய்ப்புக்கள் தற்பொழுது உங்களினதும் செயல்வீரர் மூப்பானாரினதும் கைகளில் தான் இருக்கின்றது என்பதை உலகளாவிய தமிழ்மக்கள் நன்கு உணர்வார்கள். இத்தருணம் தப்பினால் எத்தருணம் ஆகுமோ என்று ஏங்கித்தவிக்கின்றனர். ஆகவே, இதில் அதிமுக்கிய கவனம் செலுத்துவீர்கள் என முழு நம்பிக்கையுடனும், விநயத்துடனும் கேட்கின்றோம்.

4. எங்கிருந்தாலும் "தமிழன்" என்ற இந்த நாலு எழுத்துக் காரரைக் கண்டால், கேட்டால் உவவைக்கடலில் ஆழ்ந்து மூழ்கி அங்கிருக்கும் முத்துக்களை எடுத்து ஒவ்வொன்றினதும் சிறப்புகளை அடைமொழியிலும், ஆழ்ந்த மொழியிலும் அலசி காட்டும் உங்களுக்கு, சிங்கள வல்லாண்மை அரசு எப்பொழுதும் தமிழர்கள் மேல் ஏற்படுத்தும் மும்முனைத் தாக்குதல்களால் எங்ஙனம் இதுகாறும் தவித்திருப்பீர்கள் என்று நாங்கள் உணருகின்றோம். இப்பொழுது ஏற்ற சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் சாதகமாக அமைந்துள்ளதால் உங்கள் கூட்டணிக்கட்சிகளுடன் வெற்றியா இப்பணியைச் செய்வீர்கள் என்பது நிச்சயம். நிச்சயமாக உலகத்திலேயே தமிழனுக்காக ஒரு தனிநாடு வேண்டுமாயின் அது தனித்தமிழ்ழம் மட்டுமே என நன்கறிவீர்கள்.

முதல்வர் கருணாநிதி அவர்களின் முதல் பேட்டியிலிருந்து...

முதல் அமைச்சர் கருணாநிதி சென்னை கோட்டையில் நிருபர்களுக்கு அளித்த முதல் பேட்டியிலிருந்து...

கேள்வி: அநியாயமாக ஜெயலலிதா சம்பாதித்த பணம், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமா? தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்களா? ஜெயலலிதாவை பழிவாங்குவீர்களா?

பதில்: நான் யாரையும் பழிவாங்கும் எண்ணம் கொண்டவன் அல்ல. என்றைக்குமே "சேடிஸ்ட்" மனப்பான்மை எனக்கு இருந்ததும் இல்லை. ஆனால் சட்டம் அதன் கடமையை செய்யும் போது நான் குறுக்கிடுவது இல்லை.

கேள்வி: இலங்கைத் தமிழர் பிரச்சனையில் உங்கள் கருத்து என்ன?

பதில்: அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதை ஏற்க இயலாது. மத்தியில் புதிய ஆட்சி அமைந்த பிறகு இலங்கை தமிழர் பிரச்சனை பற்றி ஒரு அரசியல் தீர்வு காண முயற்சி எடுப்போம். இலங்கை தமிழர்கள் அவர்களின் கோரிக்கைகளை அவர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அங்கே அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதை சகித்துக் கொள்ள முடியாது.

கேள்வி: மதுவிலக்கு கொள்கையில் மாற்றம் உண்டா?

பதில்: இதுபற்றி நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். கொளுந்துவிட்டு எரியும் நெருப்புக்கு மத்தியில் கற்பூரம்போல் மதுவிலக்கு கொள்கையை தமிழகம் மட்டும் அமுல்படுத்தி வருகிறது. சுற்றி உள்ள மாநிலங்களில் மதுவிலக்கு இல்லை. ஆயுள் காப்பீட்டு கழகத்தில் வெளியிடப்படும் விளம்பரத்தில் விளக்கு அணையாமல் இருக்க இரு கரங்களையும் குவித்து காப்பதைப்போல தமிழகத்தில் மதுவிலக்கை காப்பாற்ற முயற்சிப்போம்.

(மிகுதி அடுத்த இதழில் இடம் பெறும்.)

மத்தியில் புதிய ஆட்சி அமைந்த பிறகு இலங்கை தமிழர் பிரச்சனை பற்றி பேசி ஒரு அரசியல் தீர்வு காண முயற்சி எடுப்போம். இலங்கை தமிழர்கள் அவர்களின் கோரிக்கைகளை அவர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்!

பாசல்...

சிகளை வழங்கினார்கள்.

சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்ற வினோத உடைபோட்டியில் பல சின்னஞ்சிறு மழலைகள் பங்கு கொண்டமை பாராட்டப்பட வேண்டியதொன்று. தாம் எடுத்துக்கொண்ட தலைப்பில் நடுவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தக்க வகையில் தம்தம் குழந்தைகளை பெற்றோர் தயார் படுத்தாதது வருந்தத்தக்க ஒரு செயலாக அமைந்தது. தலைவர், கிட்டு மாமா, அங்கவீனமான எம்மக்கள், மகதிவாழ்வின் யதார்த்தம் என வினோத உடைப் போட்டி அமைந்திருந்தது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட சிறுவர், சிறுமியருக்கான பொது அறிவுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசும் வழங்கப்பட்டன. சிறப்புரையை சுவிற்சலாந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக தலைவர் திருவாளர் வினாசித்தம்பி பாலா அவர்கள் ஆற்றினார். பொய்முகங்கள் நாடகமும் இடம்பெற்றது. நிகழ்ச்சிகளை திரு. பிரான்சிஸ் அல்பேட் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

-நிலவன், பாசல்-சுவிஸ்-

செய்தி துளிகள்

1000 எலிகளுடன் வாழ்ந்த பெண்மணி!

தூலூஸ்.

பிரான்சு நாட்டின் தென்பகுதி நகரம் தூலூஸ். இங்கே ஒரு பெண்மணி ஆயிரக்கணக்கில் எலி வளர்ப்பதாக போலீசுக்கு தகவல் வந்தது. என்ன இது வீட்டில் கிளி வளர்ப்பார்கள். புறா வளர்ப்பார்கள். எலியை கூடவா வளர்ப்பார்கள் என்று போலீசாருக்கு ஆச்சரியம். ஆகவே பெண்மணியின் வீட்டை ஒருநாள் சுற்றி வளைத்து உள்ளே புகுந்தார்கள். அங்கே வீடு முழுக்க ஒரே எலிமயம்!

அதுமட்டுமல்ல. அந்த பெண்மணியின் செல்லப் பிராணிகளை இந்த எலிகள் கடித்து விரட்டிக் கொண்டிருந்தன. வறுமை காரணமாக அந்த பெண் மணி வீட்டு தரையில்தான் படுத்து தூங்கி வந்தாராம். இருந்தும்கூட இந்த எலிகளுக்காக தினமும் 15 கிலோ உணவு தானியம் கொடுத்து வந்திருக்கிறார்.

பிளேக் பெண்மணியாக மாறி விடுவாரோ என்ற பயத்தில் போலீசார் இவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டனர். மொத்த எலிகளையும் கூண்டோடு ஒழிக்க போலீசார் திட்டமிட்டு வருகிறார்கள்.

அபாயகரமான ரஷிய ஏவுகணை!

மாஸ்கோ.

ஏவுகணை சமாச்சாரங் களில் ரஷியா எப்போதுமே முன்னணி நாடு. இங்கே தயாராகும் ஸ்மெர்ச் என்ற நவீன ரக ஏவுகணை உலகிலேயே மிக அபாயகர மான ஆயுதம் ஆகும். இரண்டாம் உலகப்போரில் 'கட்யூசா' என்ற ஏவுகணையை ரஷியா பயன்படுத்தியது. அதன் வழித் தோன்றல்தான் தற் போதுள்ள ஸ்மெர்ச் ஏவு கணை. ராணுவலார் ஒன் றின் மீது வைத்து இதை ஏவலாம்.

இதில் இருந்து ஒரே நேரத்தில் 12 ஏவுகணைகள் 70 கி.மீ. தூரம் வரை சீறிப் பாய்ந்து சென்று தாக்கக் கூடியவை. ஒரே தாக் குதலில் இவை 67 ஹெக் டேர் பரப்பளவு உள்ள பகுதி அழித்து விடக் கூடியவை. அது மட்டு மல்ல! டாங்கி எதிர்ப்பு வெடி குண்டுகளையும் இதில் வைத்து ஏவலாம். இந்த குண்டுகளால் 70 மி.மீ. கன முள்ள உலோக கவசத்தை கூட துளைத்து செல்ல முடியும். முதன் முதலாக குவைத் நாடு இந்த ரஷிய ஏவுகணை அமைப்பை வாங்க உள்ளது.

மீண்டும் இணையும் நாடுகள்!

மாஸ்கோ.

சோவியத் யூனியன் பிளவு பட்டதில் உலகில் புதுப்புது நாடுகள் உதயம் ஆகியது தெரிந்ததே. இதில் ரஷியா. பெலாரஸ் நாடுகளும் அடக் கம். தற்போது பைலோ ரஷியா என்று அழைக்கப் படும் பெலாரஸ் நாடு ரஷி யாவுடன் இணைய விருப் பம் தெரிவித்து இருக்கிறது. இனம். மொழி அடிப்படை யில் 2 நாடுகளுக்கும் இடையில் பெரிய வித் தியாசம் இல்லை. பிறகு ஏன் தனித்தனி நாடுகளாக இருக்கவேண்டும் என்பது பெலாரஸ் மக்களின் எண்ணம். விரைவில் இரு நாடுகளுக்கும் இடையில் பொதுவான நாணயம். ராணுவம். எல்லை பாது காப்பு. பொருளாதார திட் டம் ஆகியவை ஏற்பட உள்ளது.

மீண்டும் விலக விருப் பமா? 2 நாடுகளில் எது வேண்டுமானாலும் 6 மாதத் துக்கு முன் முன்னறிவிப்பு செய்துவிட்டு விலகிக் கொள்ளலாம்.

இந்த இணைப்பு தொடர் பாக ரஷிய அதிபர் எல்ட் சின். பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லூகா சென்கோ ஆகியோர் சந் தித்து பேசி உள்ளனர்.

'பம்ப்' மூலம் யானையிடம் பால் கறப்பு!

ஆக்லாந்து.

தாய்ப்பால் கொடுத்தால் உடல் அழகு கெட்டுவிடும் என்பது நவநாகரிக தாய் மார்களின் நினைப்பு. நியூசிலாந்து உயிரியல் காட்சி சாலையில் உள்ள ஒரு ஆப்பிரிக்க யானைக்கும் இப்படி ஒரு தவறான எண்ணம் வந்துவிட்டதோ என்னவோ? விசா என்ற இந்த யானை திடீரென குட்டிக்கு பால்தர மறுத்து விட்டது. என்ன செய்வது? இதே நேரத்தில் டோனா என்ற இன்னொரு பெண் யானையும் பிரசவித்தது. பிறந்த குட்டி இறந்து விட்டதால் டோனாவுக்கு ஒரே ஆற்றாமை. இந்த நிலையில் டோனாவின் பாலை லிசாவின் குட்டிக்கு புகட்டினால் என்ன என்று அதிகாரிகளுக்கு தோன்றி யது. யானைகள் ஞாபக சக்திக்கு பெயர் பெற்றவை என்பதால் டோனா மற் றொரு யானையின் குட் டிக்கு பால்தர மறுத்துவிட் டது. முடிவில் அதிகாரிகள் புதிய திட்டம் வகுத்தார்கள். டோனாவின் கால்களுக்கு அடியில் ஒருவர் நைசாக ஊடுருவி அதன் மடுவில் ஒரு குழாயை செருகினார். மின்சார உதவியுடன் இந்த குழாய் மூலம் வேகமாக பால் கறக்கப்பட்டது. மற் றொரு புறத்தில் சேகரித்த பாலை வாளிகளில் ஊற் றிக்கொண்டு அதிகாரிகள் ஓடினார்கள். பிறகு குட்டி யானைக்கு இந்த பாலை புகட்டினார்கள்.

டென்ஷனை குறைக்கும் செல்லப்பிராணி!

வாஷிங்டன்.

மனிதனுக்கு 'டென்ஷன்' ஏற்படும்போது அதிக உதவிகரமாக இருப்பது யார்? அருகில் இருக்கும் மனைவியா? அல்லது ஆசையாக வளர்க்கும் நாயா? இப்படி ஒரு விசித் திரமான ஆய்வு அமெரிக்கா வில் நடந்தது. நாய் வளர்க் கும் சுமார் 240 தம்பதி களிடம் இந்த ஆய்வு நடத் தப்பட்டது.

ஒவ்வொரு நபருக்கும் 3 விதமான புதிர்களை தந்து தர்க்கச் சொன்னார்கள். இதில் தெரியவந்த உண்மை என்ன தெரியுமா? மனிதர்களுக்கு ஏற்படும் மன உளைச்சல் அல்லது பரபரப்பு செல்ல நாய் அருகில் இருக்கும்போது குறைந்து விடுகிறதாம்.

உதாரணமாக கணக்கு புதிர் ஒன்றை ஒருவர் விடுவிக்கும்போது அவரது இதயம் நிமிடத்துக்கு 37 முறை படபடக்கிறது. அதுவே நாயின் துணை யோடு இருந்தால் நிமிடத் துக்கு 7 தடவைதான் இதயம் துடிக்கிறது.

போரடிக்கும் திரைப்படங்கள் தேர்வு!

லாஸ்ஏஞ்சல்ஸ்.

சிறந்த படங்களை ஆஸ்கார் விருதுக்காக தேர்ந்தெடுப் பது தெரிந்ததே. 'போர்' அடிக்கும் படங்களைகூட தேர்ந்தெடுப்பது உண்டா? ஆம்.

அமெரிக்காவின் நியு ஜெர்சியில் உள்ள ஆலன் கருபா என்பவருக்கு இப் படி ஒரு யோசனை உதித் தது. உடனே இதற்கென ஒரு கமிட்டியை ஆரம்பித் தார். இதன் ஒரே உறுப் பினர் இவர்தான். தற் போது 95-ம் ஆண்டின் சிறந்த 'போர்' படங்கள் என்று. இவர் 3 திரைப்படங் களை தேர்ந்தெடுத்து உள்ளார். காங்கோ. டிரா குலா. டெட் அண்ட் லவ்விங் இட் என்பதுதான் இந்த திரைப்படங்கள்.

புலிகளுடன் தொடர்பு: கனடாவில் தமிழர் கைது!

டொரான்டோ,

கனடா நாட்டின் போலீஸ் படையில் சிறிதுகாலம் வேலை பார்த்த குமாரவேலு விக்ன ராஜா (37) என்ற இலங்கைத் தமிழர் கைது செய்யப்பட்டார். விடுதலைப்புலிகளுடன் நெருங் கிய தொடர்பு கொண்டுள்ள அவர் இந்திய அமைதிகாப்புப் படை வீரர்களைக் கொலை செய்திருக்கிறார் என்ற சந்தேகத் தின்பேரில் கைது செய்யப்பட் டிருக்கிறார்.

கனடாவில் குடியேறிய விக்ன ராஜா, இலங்கை வங்கியில் பணி புரிந்திருப்பதாகவும், ராணுவத்துக்கு சட்டம்-ஒழுங் கில் உதவிகளைச் செய்ததாக வும் ஆவணங்களை அளித்து கனடா நாட்டு ராயல் குதிரைப் படை போலீஸில் வேலை பெற் றார். அங்கு இலங்கைத் தமிழர் களின் ஆவணங்களை மொழி பெயர்க்கும் வேலையில் போலீ சாருக்கு சில காலம் உதவிக ளைச் செய்தார்.

அவரிடமிருந்த ஒரு பத்திரி கையின் முன் அட்டையில் இந் திய வீரர்களின் சடலங்களுக்கு இடையே புலிகளின் ராணுவ உடையில் விக்னராஜா நடந்து செல்வது போன்ற புகைப்படம் இருந்தது.

பயங்கரவாத அமைப்பு என்று தங்களுடைய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கும் புலிக ளின் அமைப்பில் இருந்ததும் அல்லாமல் பொய்யான தகவல் களைக் கூறி வேலையில் சேர்ந்த தாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"இளைஞன்" அடுத்த இதழில்!

"இளைஞனின் டைரி குறிப்புகள்"

தொகுத்துத்தருபவர்: "நாடோடி"

கவிதைகள் உலகம்

ஓ... இளைஞனே...

ஆமை கூட
பந்தயத்தில்
வெற்றி பெறும்
பொழுது
உனக்கென்ன
கவலை?
வா,
உழைக்கலாம்...
உயரலாம்!

-பத்மாவதி-

காதல் முத்தம்!

உனது காதல்
முத்தங்களால்
கரைந்து விட்டது
என் கண்ணீர் முகவரி.

-சாந்தினி ரமேஷ்-

செத்தாலும் உம் நினைவோடு

வித்தார கதைகள் பல அச்சாரமாக கூறி - என்
சொத்தான நகைகளை வித்து பிளேனேறி
முத்தான நாடென்று பாரிசில் குடியேறிய - என்
அத்தானே நீர் சென்று ஆண்டைந்து ஆகின்றது
செத்தாளோ இப்பாவியென அறிய நீர் முயலவில்லை
சொத்தான உம் செல்வங்களையும் மறந்தாயோ அத்தானே!

அரபு நாடு சென்றால் ஒரு வருஷம் தான் "கொன்றாக்"
ஐரோப்பிய நாடென்றால் ஐஞ்சு வருஷமெண்டு
கொஞ்சல் கதை அளந்து கொடியையும் வித்தீர் அன்று
கஞ்சிக்கும் கதியற்று கலங்குகின்றோம் இன்று.

மிடுக்காக நான் நினைத்தேன் அத்தான் வெளிநாடு போனால்
அடுக்கான மாடிவீடு கட்டலாமென்று - இன்று
படுக்க இடமில்லை பத்தைக்குள் தான் வாழ்க்கை
கொடுக்கான் பூச்சிகளும் எங்களுக்கு சொந்தம் இன்று.

அழகான வீட்டின் ஆசை எல்லாம் போச்சு
உறங்கி எழ எமக்கொரு கொட்டிலே போதும்
வித்து நீர் சென்ற சொத்தெனக்கு வேண்டாம்
அத்தானே நீர் உயிர் வாழ்ந்தால் போதும்
எத்தனை காலம் நாம் வாழ்வோமோ தெரியாது
செத்தாலும் உம் நினைவு மனதை விட்டகலாது.

-வண்ணை தெய்வம், பிரான்ஸ்-

அதர்மம்

தத்துவம் பேசிடும் அம்மா
தருவாளா சுதந்திரம் சும்மா
அகிலத்தை ஏமாற்ற அம்மா
ஆடுறா நாடகம் சும்மா

முட்டைக்கும் கருவுக்கும் அம்மா
முழுவேற்றுமை சொல்லுறா சும்மா
மொட்டையர் பேச்சுக்கு சும்மா - பெரும்
ஆட்டம் தான் போடுறா சும்மா

முன்னவர் செய்தது பிழையென்ற அம்மா
பின்வந்து என்னதான் செய்யிறா சும்மா
குழிதோண்டி ஆட்சியைப் பிடித்தவா- இப்போ
கொலை செய்து தமிழரை ஆற்றிலே வீசுறா சும்மா

கொண்டவன் குமாரின் கொள்கையில் ஆட்சி
கொண்டுவருவேன் என்றவா - இப்போ
பெற்றவர் வழியிலே நாட்டினை அம்மா
பேயாட்டம் ஆட்டுறா சும்மா

தமிழர் தலையிலே குண்டினைப் போட்டு
தன்னாட்சி காத்திடும் அம்மா
உதட்டாலே தத்துவம் பேசுறா சும்மா
உள்ளத்தால் அதர்மமே செய்யிறா அம்மா!

-வேலணையூர் பொன்னண்ணா, டென்மார்க்-

கவிதை இல்லை

ஆசை வந்தபோது கையில் பணம் இல்லை
கையில் பணம் வந்தபோது ஆசை இல்லை
பசி வந்தபோது உணவு இல்லை
உணவு வந்தபோது பசி இல்லை
எழுத நினைத்த போது சிந்தனை இல்லை
சிந்தனை வந்த போது எழுத நேரம் இல்லை
நெஞ்சில் காதல் வந்தபோது காதலி இல்லை
மனைவி வந்தபோது நெஞ்சில் காதல் இல்லை
நெஞ்சில் பாசம் வந்தபோது பிள்ளை இல்லை
பிள்ளை வந்தபோது நெஞ்சில் பாசம் இல்லை
நினைத்த போது எதுவும் இல்லை, இல்லை
அதனால் இங்கு நான் நானாக இல்லை.

-ரவிசெல்லத்துரை-

கவிதை

பூக்கள் பூக்கும்
அதிகாலைப் பொழுது...

புல்லின் நுனியில்
சில்லித்திருக்கும்
பனித்துளிகள்...

பனியின் விலாசத்தை
சொல்லிவிட்டு செல்லும்
காற்று...

காற்றில்
கலந்து வரும்
எனது கவிதை வரிகள்..!

-குமாரவேல் செந்திவேல், UK-

வாழ்த்துகிறார்கள்

இளைஞனுக்கு அகவை மூன்று
முன்னேறும் பாதையில்
முளைத்த தடைகளகற்றி
தன்னிகரில்லா பத்திரிகையாய்
பவனி வரும் இளைஞனே
வாழிய நீ!
தரமான பத்திரிகையாய்
பரணியிலே வாசக
இதயங்களை கவர்ந்துவிட்ட
விடலை நீ!
விடாது உன் பணி
தொடர வாழ்த்துகின்றேன்.

-கற்கி, பிராங்பேர்ட்-

வாழ்த்துகிறார்கள்

மூன்றாவது ஆண்டில்
கால் பதிக்கும்
"இளைஞன்"
இனிமையாகவே
என் இதயம்தனிலே
இனிக்கின்றான்
இனிமையை என்றும்
சுவைக்கத் தரவே
இனிமைகள் யாவும்
பெற்றுள்ளான்
இன்று போலவே
இவனென்றும்
இளமையாக
வாழ்ந்திடவே
இனிமைத் தமிழர்கள்
நாம் அவனை
வாழ்த்திடுவோம்!

-ராஜா சிவகுமார், DUEREN-

கேள்வி...

டத்தில், பார்த்தவுடன் அதிர்ச்சியூட்டக்கூடிய, ஐயோ ஆபாசம் என்று அலறக் கூடிய ஒரு ஓவியம் உண்டு.

அந்த ஓவியத்தில் ஏழெட்டுப் பெண்கள் ஏழெட்டு ஆண்களுக்கு முலையூட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஓவியத்தின் அடிக்குறிப்பில் எழுதப்பட்டிருப்பதை படித்துப்பார்த்தால் ஓவியத்தின் அர்த்தமே மாறிவிடும்.

ரஷ்சியப் புரட்சியின் போது ஜார் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தண்ணீரும் உணவும் மறுக்கப்பட்ட அவர்கள் தாகத்தில் தவிக்கிறார்கள்.

தாகத்தால் அவர்கள் இறந்து விடக்கூடும் என்ற நிலையில், பார்வையாளர்களாக வந்த தாய்மார்கள் சிறைக்க தவுற்கு வெளியே நின்று கம்பிகளின் இடுக்கு வழியே தாய்ப் பாலைத் தண்ணீராக ஊட்டுகிறார்கள்.

இடம் - காலம் இரண்டையும் தெரிந்து அந்த ஓவியத்தைப் பார்த்தால், ஆபாசம் அழிந்து, அனுதாபம் பிறக்கும்

காலக்கண், கலைக்கண் கொண்டு பார்க்கிறபோது ஆபாசம் இல்லை. ஆனால், காலம் -கலை இந்த இரண்டையும் அறியாத கண்களே அதிகம்..

பிள்ளைகள் தங்களை "அம்மா", "அப்பா" என்று அழைப்பதை விட, "மம்மி", "டாடி" என்று அழைப்பதில் சில வெளி நாட்டுப் பெற்றோர் பெருமை கொள்வதேன்?

-எஸ். சுரேந்திரன், ஜேர்மனி-

தங்கள் பிள்ளைகளுக்கு "மைக்கல் ஜாக்ஸன்", "மடோனா" என்று வாயில் நுளையாத பெயர்களை வைத்து மகிழும் பெற்றோர்-தங்களை, "மம்மி", "டாடி" என்று அழைப்பதைத்தானே விரும்புவார்கள்!

வாசகர்களிடமிருந்து ஜனரஞ் சகமான கேள்விகள் எதிர் பார்க்கப்படுகின்றன. -ஆ-ர்-

ஈழத்தி...

தமிழர்கள் வதைபடுவதை பற்றி கவலையே கொள்ளாமல் இருக்கிறது.

முன்பெல்லாம் வெளியுறவுச் செயலாளர் ஒப்புக்காவது இலங்கைக்கு போய் பேசிவிட்டு வருவார். அவர்களும் தற் போது போவதில்லை.

போர் நிறுத்தம்

உலகில் உள்ள தமிழினம் கண்ணீர் வடிக்கிறது. ஆனால் கேட்பதற்குத்தான் யாரும் இல்லை. ஜனநாயகத்தில் நம் பிக்கையுள்ள எந்த நாடாவது இந்த கொடுமையை கண்டிக்க முன்வர வேண்டும். தன் சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ள தமிழர் களுக்கு மீண்டும் மறுவாழ்வு கிடைக்க வேண்டும். இலங்கை அரசை உலக நாடுகள் வற் புறுத்தி. போர் நிறுத்தத்தை தமிழர் பகுதியில் கொண்டு வர வேண்டும்.

தற்போது தமிழர்கள் தலைவ ரான அமிர்தலிங்கம் போன்ற வர்கள் இல்லை. வெளி உலகத்தில் சமாதானத்திற்கு பாடுபடும் எந்த தலைவராவது இதில் நடுநிலையாளர்களாக இருந்து தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என உலக தலைவர் களை வணங்கி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

இலங்கை...

சார் அவரை கைது செய் தார்கள். ஆங்காங்கே மனைவிகளுடன் ஊடல் செய்துவிட்டு இவர் வரதட் சணை பணம். நகைகளை அபேஸ் செய்ததும் தெரிய வந்தது. ஆசாமி தற்போது நீதிமன்ற காவலில் உள் ளார்.

மக்களை...

பெயர் சூட்டினோம். இதை மறக்கக் கூடாது.

இல்லாவிட்டால், கடந்த காலத்தில் அல்ல -நிகழ் காலத்தி லேயே -தேர்தலுக்கு முன்பு மக் களை மதிக்காத பேரவை உறுப் பினர்கள், அமைச்சர்கள் ஆகி யோர் அவர்கள் வென்ற தொகு திகளுக்குள்ளேயே நுழைய முடியவில்லை. அத்தகைய புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. அதை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணச் சர்வாதிகாரியைப் போல நான் செயல்பட மாட் டேன். தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், இந்த அணியில் இல்லாத பிற தலைவர்கள் ஆகி யோரைக் கலந்து பேசி நிரந்த ரத் தீர்வு காண முயல்வேன்.

சுட்ட...

துத் கூத்தடித்து சேறாக்கியிருக்க முடியும்? அது எப்படி சாத்தியமா யிற்று?

பாதையில்லாக் காட்டில் நுழைந்து வந்தது மகாவம்சமோ, துட்ட கைமுனுவோ அல்ல! துட்டகை முனுவிலும் கொடியவர்களான சென நாயக்காகள், பண்டாரநாயக் காக்கள், ஜெயவர்தனாக்கள் நுழைந்து வந்ததோடல்லாமல், அறிவுக்கண்ணில்லாத இந்த சிங் களப் பெண்ணின் காதுவழி புகுந்து நெஞ்சை சேறாக்கி இன வெறியென்ற விதையைத் தூவி அதை அசுர வேகத்திலும் வளர்த் தும் விட்டார்கள்.

நெல்லில் கலந்த கல்லை வேறு படுத்தலாம்.

பாலில் கலந்த நஞ்சை வேறுப டுத்த முடியுமா?

பணிந்து போனாலும், பல்லி ளித்து நின்றாலும், கைகட்டிச் சேவகம் செய்யத் தயாரென்றாலும் பறைத்தமிழன் பறைத்தமிழன் தான்.

சம்வங்களின் தொகுப்புத்தான் சரித்திரம்!

சிறுதுளிகளின் சேர்வே பெரு வெள்ளம்!

என் நெஞ்சு சுமக்கும் சம்பவங்க ளில் ஒன்றுதான் இது!!

நம் தரப்பில் புதுச்சரித்திரம் எழுதப்படுகிறது. புதுவெள்ளம் பாயவாரம்பித்து விட்டது.

ஐ.நா. சபை கூட தன் கட்டிட முன்றலில் நிறுத்தப்பட்ட கொடிக் கம்பங்களுக்கருகே புதிய கம்ப மொன்றையும் நாட்டுவிட்டது. புதுக்கொடியை நாம் கையளிக்க வேண்டியது தான் பாக்கி!

நல்ல உள்ளங்கள் சில இன்னும் சுட்ட மண்ணையும், பச்சை மண் ணையும் பிசைந்து பொம்மை செய் வதில் நேரத்தை வீணடிக்கிறார் கள்.

அன்போடு ஒரு வார்த்தை!

சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் சேராது!

வாசகர்ட்கு,

'இளைஞன்' என்ற நீதிமன் றத்தில் வாசகர்கள் என்ற நீதிபதிகள் முன்பு -புதுமைக் கவியென்றும், புரட்சிக்கவி யென்றும், விடுதலைக்கவி யென்றும் போற்றப்படும் பாரதியை குற்றவாளிக்கூண் டில் நிறுத்தி தண்டனை அளியுங்கள் என வாதாடப் போகின்றேன் அடுத்த இத ழில். வழக்கை கேட்டு நல்ல தீர்ப்பு வழங்குங்கள்.

வண்ணை ஆனந்தன்

தேன்கூடு...

களாம்! நிஜ வாழ்க்கைதான் திறமையான ஆசிரியை! வாழ்க் கையை தயாராக்கிக் கொள்ள அனுபவம்தான் மிக அருமையான ஏற்பாடு. என்பது பெற்றோரின் வேதவாக்காக இருந்திருக்கிறது! இதற்கேற்ப தனது பிள்ளைக ளையும் ஜெசிக்கா (7), ஜொஸீவா (9), ஜஸ்மின் (3) பாடசாலைப்பக் கமே தலைகாட்டவிடவில்லை. விளையாட்டுப் பொருட்களுக்குப் பதிலாக தொழில் சம்பந்தமான ஆயுதங்களே ஜெசிக்கா கைகளில் கிடைத்தன!

6 வது பிறந்தநாள் பரிசாக, விமானத்தில பறக்க அவள் பெற் றோரால் ஏற்றிச்செல்லப்பட்ட போது, ஜெசிக்காவிற்கும் பறக்கும் ஆசை தொற்றிக்கொண்டது! பறக் கும் வகுப்புகளும் ஆரம்பமாகின. மணிக்கு 50 டாலர்கள் என்று, தந்தை செலவிட்டதோடு, கண் டத்தின் குறுக்கே மகளைப்பறக்க வைக்க 15,000 டாலர்கள் வரை யில் தாரைவார்த்திருக்கிறாராம்! ஜெசிக்காவை வெள்ளை மாளி கைக்கும் கடிதம் ஒன்று எழுத வைத்திருக்கிறார் தந்தை. தன் னோடு பறக்க ஜனதிபதி கிளின் டனையும் அழைத்து ஜெசிக்கா கைப்பட எழுதப்பட்ட கடிதத்தை வெள்ளை மாளிகை ஏற்றுக்கொள் ளவில்லை!

விமான விபத்து நடந்த இடத் திற்கு தாய் போயிருக்கிறார். மகள், கணவன் இருவருமே இறந்து விட்டதில் அவள் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. ஒரு சிறு பையன் "Teddy Bear" என்று சொல்லப்படும் கரடிப்பொம் மையை, இவள் கையில் திணித் தபோது வாங்க மறுத்திருக்கிறாள் தாய்.

"என் ஜெசிக்கா விளையாட்டுப் பொம்மைகளோடு விளையாடுவ தில்லை" என்று மறுத்தற்கான காரணத்தையும் கூறியிருக்கிறாள்!

இன்னொரு பத்திரிகைப்பேட்டி யில் இவள் என்ன கூறியிருக்கி றாள் தெரியுமா?

ஜனங்கள் என்னிடம் என்ன எதிர் பார்க்கிறார்கள் என்று தெரியும்... கண்ணீர்... நான் ஏன் அழுது கண்ணீர் வடிக்க வேண்டும்? அது பொய்யான வெளிப்படுத்தல் என் பது என் கருத்து.

தன் மகன் அழுததாகவும், இனி தான் பறக்கவே மாட்டேன் என் றும் கூறியிருக்கிறானாம்.

விசித்திரமான உலகம்... விசித் திரமான மனிதர்கள். குருவி தலையில் பனங்காயை வைத்து சுமக்கச் சொன்னால் முடிந்த காரியமா?

Largest Circulation in Europe இளைஞன் அடுத்த இதழில்!

பிரபல எழுத்தாளர்
செ. பரராசசேகரம் எழுதும்
ஈழப் பூர்வீக வரலாறு
(ஈழவிடுதலைப் போராட்டத் தொடர்...)

பிரபல எழுத்தாளர் கற்கி எழுதும்
இவன், இவர், நீங்கள்
(நெடுங்கதை)

அரசில்...

விட்டது.

கடந்த காலத்தில் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் சிவில் உடையில்ச் சென்று தமிழர்களைப் பச்சை பச்சையாக படுகொலை செய்தனர். நான்கூட நாரஹேன்பிட்டியில் இத்தகைய சம்பவங்களைக் கண்டேன். இந்த நிலையில் இராணுவத்தினர் எவ்வாறு அன்பாகப் பேசினாலும் தமிழ்மக்கள் அவர்களைக்கண்டு ஒதுங்குகின்றார்கள்.

இந்தநிலையில் அதிகாரத்தைப் பரவலாக்கி வடபகுதி மக்களையும் ஆட்சியில் பங்காளிகளாக்கினால் மட்டுமே பிரச்சனைக்கு தீர்வு காணுதல் சாத்தியமாகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஐரோப்...

இருக்குமாம். எல்லா நாடுகளிலும் உள்ள உணவுவிடுதிகளோ அல்லது வேறு கடைகளோ ஒவ்வொரு தராதரங்களை கொண்டிருக்கிறது. மனிதன் தனது வசதிற்கேற்ப ஒவ்வொன்றையும் தெரிவுசெய்கிறான். இலங்கையை பொறுத்தவரையில் பொருளாதாரப்பிரச்சனை பெரிய நெருக்கடி! வேண்டாத போர் பொருளாதாரத்தை நசித்தபடி இருக்கின்றது. மக்கள் நிம்மதியைத் தொலைத்துவிட்டு கண்ணீர் விட்டபடி வாழ்கிறார்கள். இலங்கை வளர்ச்சிபெற முடியாமல் சிதைந்து கிடக்கிறது. இலங்கையில் மூன்று தரமான பிரிவினர் இருக்கிறார்கள். அன்றாடம் கூலிக்காக மாரடிப்பவர்கள், மத்திய தரவர்க்கத்தினர், மற்றும் முதலாளி வர்க்கத்தினர். ஒவ்வொருவரும் தமது வசதிற்கேற்ப ஒவ்வொன்றையும் தெரிவு செய்கிறார்கள். எல்லோரும் ஒரே தரத்தில் வாழும் கம்யூனிஸ நாடல்ல இலங்கை! ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்குச்சென்றவர் ஒருவேளை பணத்தைச் செலவழிக்க விருப்பமில்லாமல் கீழ்மட்டத்திலுள்ள உணவகத்திற்குச்சென்று, கல்லும் மண்ணுமாக இருக்கிறது உணவு என்று கூப்பாடு போட்டிருக்கலாம்!

இல்லாவிடில் ஐரோப்பாவிற்கு வருமுன்பு அங்கே தினசரி வாடிக்கையாளராக இருந்த பழக்கதோஷத்தில் திரும்பவும் போனாரோ தெரியவில்லை. ஐரோப்பிய நாடுகளில் வாழும் சில பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு தமிழ் கதைக்க விருப்பமில்லை என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். இந்த நாட்டு மொழியில்தான் ஆர்வம் என்கிறார்கள். இந்தநாட்டுப் பாஷை இந்த நாட்டு எல்லைவரையும்தான அன்பர்களே! இன்னொரு சாரார் தாம் ஆங்கிலம் தெரிந்தால் ஆங்கிலத்தில்தான் கதைப்போம். ஆங்கிலப்பத்திரிகைதான் வாசிப்போம் என்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் வேறு தமிழர்களை கண்டவுடன் தமது பிள்ளைகளுடன் பிழையான ஆங்கிலத்தில் சம்பாஷிக்க முயல்கிறார்கள். இவர்கள் தங்கள் தலையிலேயே மண்ணை வாரிக்கொள்கிறார்கள். ஆங்கிலம் உலகமறிந்த மொழி. அத்தியாவசியமான மொழிதான். அதை நன்றாக தெரிந்திருந்தால் மட்டும் உபயோகியுங்கள். தெரியாதவற்றை தெரிந்தது போல் பாசாங்கு செய்து உங்களையே நீங்கள் ஏன் முட்டாளாக்கிறீர்கள்? தமிழ்ச்சாப்பாடு சாப்பிடுதலை குரங்கு சாப்பிடுதல் போல இருக்கிறதாம். பொட்டு வைத்தல் தாழ்வு என நினைக்கிறார்கள். பொட்டின் மகிமை என்ன என அறியாத பச்சோந்திகள்!

அன்பர்களே, நாகரீகம் என்பது நீங்கள் நடந்து கொள்ளும் முறையில்தான் இருக்கிறது. உங்கள் குடும்ப பின்னணியிலும் தங்கியுள்ளது. நீங்கள் என்னதான் ஆடை அலங்காரம் பண்ணினாலும் உங்களது கதை, நடத்தை, நிறம் ஏதோவொரு விதத்தில் உங்களை யார் என்று காணபித்துவிடும். நீங்கள் உங்களையே ஏமாற்றுகிறீர்கள். மற்றவர்களை மடையர்களாக நினைத்து நீங்கள் புத்திசாலிகளாக ஏன் நினைக்கிறீர்கள்? போலிகளால் நிஜங்களை மறைக்க முடியுமா? இது இடைக்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்! செந்தமிழையும், தமிழ்க்கலாச்சாரத்தையும், தாய் நாட்டையும் மதியுங்கள். வெற்றியடைவீர்கள்!

சிரி! சிந்தி!

(ஆசிரியரின் பாராட்டைப் பெறுகிறது இந்த சிந்திப்பு)

தமிழன்: என்னிடம் சொந்த வீடு இருக்கு. சொந்தக் கார் இருக்கு. பெட்டி நிறைய நகை இருக்கு. என்ர கணக்கில் பாங்கில் நல்ல பணம் இருக்கு.

ஐரோப்பியன்: எனக்கு என்று சொந்த நாடு இருக்கு.

தமிழன்: ???!!!. . .

-ரவி செல்லத்துரை-

நம்பினால் நம்புங்கள்

நம்பினால் நம்புங்கள் பகுதியில் வரும் 'மிஸ்டர் அவதானி'யின் அவதானிப்புகள் யாருடைய மென்மனதும் புண்படுவதற்காக எழுதப்படுபவை அல்ல. எம்மை நாமே மாற்றிக்கொள்ளவும், கொஞ்சம் சிந்திக்கச் செய்வதுமே அவதானியின் ஆணித்தரமான நோக்கமாகும். -ஆ-ர்-

அவர் என்னுடைய சிறந்த நண்பர். ஒருநாள் அதிகாலை 6 மணிக்கு எனக்கு தொலைபேசி எடுத்து "மச்சான் காசு இருந்தால் ஒரு 500, -DM தருகிறாயா? சம்பளம் வந்ததும் தருகிறேன்" என்றார்.

"காசு கேட்கிறதுக்கு இந்த அதிகாலை நேரம்தானா டாப்பா உனக்கு கிடைச்சது?" என்றேன் நித்திரை அலுப்போடு.

"இல்லை மச்சான், இப்பத்தான் வவுனியாவிலிருந்து எங்கட சொந்தக்காரர்கள் தொலைபேசி எடுத்து, தாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தங்கள் காணி, வீடு, சொத்து எல்லாத்தையும் விட்டுட்டு, உயிர் தப்பினால் போதுமென்று வெளியேறி அகதியாக இப்ப கிளிநொச்சியில் ஒரு கொட்டிலில் தங்கியிருக்கினமாம். உடனடியாக கைச்செலவுக்கு இன்று மாலைக்குள் "உண்டியல்" மூலம் 1000, -DM அனுப்பட்டாம்"

"1000, - DM அவர்கள் கேட்க நீ என்ன 500, -DM மைக் கொடுத்து சமாளிக்கப் பார்க்கிறாயா?

"இல்ல மச்சான், இப்ப என்ர அண்ணைக்கு தொலைபேசி எடுத்து விபரத்தைச் சொல்லி 500, -DM கேட்டனான். ஆனால் அவர் தர மறுத்துட்டார்.

"ஏனாம். . . "

"அவர் 10 வருடத்திற்கு முன்பு வெளிநாட்டுக்குவரும் போது, காசு தட்டுப்பாட்டில், அப்ப பணக்காரர்களாக இருந்த எங்கட அந்த சொந்தக்காரர்களிடம் கேட்க, அவர்கள் முதலில் தர மறுத்து பிறகு வட்டிக்கு என்ர அண்ணனுக்கு காசு கொடுத்தவவையாம். அதை எப்படி மறக்க முடியும்?" என்று கேட்கிறார்.

"நியாயமான கேள்விதானேயடா"

"இல்ல மச்சான், இந்த உலகம் உருண்டையானது என்பது எவ்வளவு உண்மையென்று இப்பத்தான் புரியுது. அன்றைக்கு வட்டிக்கு காசு கொடுத்தவை இன்று கஞ்சிக்கு வழியில்லாமல், வட்டிக்கு கொடுத்தவர்களிடமே கையேந்த வேண்டிய நிலைமை. இந்த நாட்டுப் பிரச்சனையால் எங்கட தமிழ்ச்சனம் நல்ல பாடம் படித்திருக்கும் என்றே நினைக்கிறேன். "

"சரி. . . சரி. . . அறுக்காமல், மதியம் 2 மணிபோல நான் வேலை செய்யும் இடத்திற்கு வா காசு தருகிறேன்"

-மிஸ்டர். அவதானி-

நம்புங்கள்

தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு மிகவும் பிடித்த கவிதை இது!

காசி ஆனந்தன்.

நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும்!
நாட்டின் அடிமை
விலங்கு தெறிக்கும்!

பாரில் தமிழ்மண்
வீரம் படைக்கும்!
பகைவன் ஓடும்
சேதி கிடைக்கும்!
போரில் வெற்றி
முரசும் முழங்கும்!
புலிகள் கழுத்தில்
மாலை குலுங்கும்!

கூண்டுப் பறவை
சிறகு விரிக்கும்
குனிந்த முகங்கள்
நிமிர்ந்து சிரிக்கும்!
மாண்ட வீரர்
கனவு பலிக்கும்!
மகிழ்ச்சிக் கடலில்
தமிழ்மண் குளிக்கும்!

வானம் நமது
கொடியை அழைக்கும்!
மாற்றார் முகத்தில்
நாணம் முளைக்கும்!
மானம் நமக்கோர்
மகுடம் வழங்கும்!
மண்ணில் நமது
பெயரும் விளங்கும்!

நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும்!
நாட்டின் அடிமை
விலங்கு தெறிக்கும்!

-காசி ஆனந்தன்-

http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) - 1079 /09

ELAIGNAN
பொள்ளாச்சி நசன்
ஆனி - 1996

Largest Circulation in Europe
இளைஞன்

ELAIGNAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany
Tel: 069/ 704439, Fax: 069/ 775669

ஜேர்மனியில் 15 வருட கால வியாபார அனுபவமிக்க சிறந்த ஸ்தாபனம்!
அபிராம் நிக்கோ பலஸ்
தங்க நகைகளின் தரமான தெரிவுக்கும், ஆடவர் - நங்கையர், சிறுவர்க்கான ஆடைத் தேர்வுக்கும், தரமான ஓடியோ, வீடியோ, பிரதிகளுக்கும், மற்றும் அனைத்துரக மளிகைப்பொருட்களுக்கும்...
-Lange Wende 53, Neheim-Huesten, 59755 Arnsberg. Tel: 02932/82712, Fax: 02932/25312-

கந்தப்புவும், சோமண்ணையும்

சோமண்ணை: மாப்பிள்ளைக்கு மாலை போட குனிந்த பொம்பிளை, இன்னும் நிமிரக்காணலயே ஏன்?

கந்தப்பு: அண்ணன்காரன் வாங்கியனுப்பின 100 பவுன் காசுமாலை பாரத்தில இடுப்பு கொஞ்சம் சுளுக்கிட்டுதாம். அதுதான் தாமதம்.

சோமண்ணை: ???!!!...

-கீதாச்சந்திரன் - சுவிஸ்-

2 மின் கோபுரங்களை புலிகள் தகர்த்தனர்!

திருகோணமலை மாவட்டமே இருளில் மூழ்கியது!!

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் 2 மின்சார கோபுரங்களை விடுதலைப்புலிகள் தகர்த்தனர். இதனால் மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கியது.

இலங்கையில் வடக்கு பகுதியான யாழ்ப்பாணத்தில் சிங்கள ராணுவம் முன்னேறி செல்கிறதல்லவா? இதனால் வடக்கு பகுதியை விட்டு வெளியேறிய புலிகள் கிழக்கு மாவட்டமான திரிகோணமலையில் தாக்குதலை தொடங்கியுள்ளனர். திரிகோணமலை மாவட்டத்தில் முல்லீபதனா என்ற இடத்தில் ராட்சத மின் கோபுரங்கள் உள்ளன. இந்த மின் கோபுரங்களை வெடிகுண்டு வீசி தகர்த்தனர்.

இதனால் திரிகோணமலை மாவட்டத்திற்கு மின்சப்ளை துண்டிக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கி கிடக்கிறது.

மின்கோபுரங்களை மீண்டும் சீரமைக்கும் வேலையில் மின்சார துறையினர் ஈடுபட்டு இருக்கிறார்கள். கடந்த மாதம் இதே பகுதியில் 132 கிலோ வாட் சக்தி கொண்ட லைனை புலிகள் தகர்த்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 54 பெண்களை மணந்தவர் கைது!

(கொழும்பு)

இலங்கை ரத்தினபுரா மாவட்டத்தை சேர்ந்தவர் தமிக்காபெனரா (வயது 36) இவரது புதிய சாதனை என்ன தெரியுமா? மொத்தம் 32 இடங்களில் பெயர் மாற்றிச்சொல்லி ஆள் மாறாட்டம் செய்து 54 பெண்களை இவர் திருமணம் செய்து இருக்கிறார். அதுவும் 5 ஆண்டு காலகட்டத்தில். இவ்வளவு பெரிய சாதனை ஆசாமி படுஅமர்க்களமாக 54 வது திருமணத்தை முடித்த கையோடு போலீ

தொடர்ச்சி 22ம் பக்கம்...

- தமிழ் மக்கள் -

அரசில் நம்பிக்கை இழந்து விட்டனர்; படையினரைக் கண்டால் ஓடுகின்றனர்!

சிறிலங்கா ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

'மத்திய அரசின் மூலம் தமிழ்மக்கள் தமது பிரச்சனைக்கு தீர்வு காண முடியாதென்று நம்பிக்கை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.'

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த விழாவொன்றில் கலந்து கொண்ட அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

மத்திய அரசு பற்றியும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் பற்றியும் தமிழர்களுக்கு நம்பிக்கையில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வடக்கிற்கு மின்சாரம் வழங்கியோ, வீதிகளைச் சீரமைத்தோ இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது.

வடக்கு கிழக்கு பிரச்சனை பொருளாதார சமூக நீதி அடிப்படையில் தீர்வு காண முடியாத அளவிற்கு முற்றி

தொடர்ச்சி 23 ம் பக்கம்...

YARL TRADERS
(KRISHNA)
Specialist fur Asiatisch lebensmittel

அன்பான வாடிக்கையாளர்களுக்கு,
கிருஷ்ணா இந்தியன் சொப் ஸ்தாபனத்தார் தமது ஸ்தாபனத்தின் பெயரினை 01.04.96 முதல் யாழ் ரேடர்ஸ் என்னும் பெயருக்கு மாற்றியுள்ளனர் என்பதனை அறியத் தருகின்றோம். நவீன முறையடுத்தப்பட்ட எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் உங்களுக்குச் சேவை செய்யக்காத்திருக்கின்றது. எங்கள் பொருட்களின் மலிவுக்கு நிகராக எங்கும் நீங்கள் பொருட்களைப் பெறமுடியாது. எங்கள் பொருட்களின் தரத்தினையும் மலிவினையும் அறிவதற்கு ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

-YARL TRADERS, Taunus Str 24 A, 60329 Frankfurt, Tel: 069/ 234632, Fax: 069/ 234632-